# உதய சூரியன்

*A Rise to brighten the upcountry*

Registered at the Department of posts of srilanka under No.QD/179/News/2014

களம் 06 உதயசூரியன்-05 (20 August 2015) பக்கம்: 32 விலை:20/=


பொது நூலகம்

# பாராளுமன்ற தேர்தல்

# 2015

## ஐ.தே.க

## 45.66%

மொத்த வாக்கு

5,098,927

## ஐ.ம.சு.கூ

## 42.38%

மொத்த வாக்கு

4,732,669



**ஆசனங்கள் 106**

பெற்றுக்கொண்ட வாக்குகள்

ரணில் 500,566

**ஆசனங்கள் 95**

பெற்றுக்கொண்ட வாக்குகள்

மஹிந்த 423,529



# உச்சத்தை தொட்டவர்கள்!

இத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ களமிறங்கியவுடனேயே விருப்பு வாக்கில் வெல்லப்போவது மகிந்த வா? ரணில் விக்கிரமசிங்கவா என்ற பட்டி மன்றம் தொடங்கிவிட்டது.

மேலும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு சாதனை படைத்த தயாசிறியும் குருணாகலில் போட்டியிட்டிருந்ததால் மகிந்தவுக்கு தயாசிறி சவாலாக விளங்குவாரா? எனப் பல ஆரூடங்கள் வெளியாகியிருந்தன.

இதற்கான பதில் கிடைத்து விட்டது ரணில் விக்ரமசிங்க 5 , 56, 600 வாக்கு களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதுவரை சந்திரிகா அம்மையார் 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெற்றுக்கொண்ட 4, 64,588 வாக்குகளே தனிநபர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிகூடிய வாக்குகளாக இருந்தது. இந்த சாதனையை முறியடித்து ரணில் 5 ,56600 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 58 இலட்சம் வாக்குகளைப் பெற்ற மகிந்தவிற்கு குருநாகலில் 4 ,23,529 வாக்குகளே கிடைத்தன. (குருணாகலில் வழங்கப்பட்ட மொத்த வாக்கு 10 ,8459)









மேலும் மலையகத்தில் திகாம்பரம் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டார்.

இந்தவகையில் இப்பொதுத் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று மக்கள் செல்வாக்கு மிக்கவர்களாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் இவர்கள்தான்.

**கொழும்பு மாவட்டம்**

**ஐ.தே.க**

| | |
|---|---|
| ரணில் விக்ரமசிங்க | 556,600 |
| சுஜீவ சேனசிங்க | 117,049 |
| ஹர்ச த சில்வா | 114,147 |
| ரவி கருணாநாயக்க | 111,399 |
| பாட்டலி சம்பிக்க ரணவக்க | 100,444 |
| (தமிழ் உறுப்பினர்களில் | |
| மனோ கணேசன் | 69,064 |

**ஐ.ம.சு.கூ.**

| | |
|---|---|
| விமல் வீரவன்ச | 313,801 |
| உதய கம்பன்பில | 198,818 |
| சுசில் பிரேம ஜயந்த | 174,075 |
| தினேஷ் குணவர்தன | 124,451 |









**ஜே.வி.பி.**

| | |
|---|---|
| அனுரகுமார திஸாநாயக்க | 65,966 |

**குருணாகல் மாவட்டம்**

ஐ.தே.க.

| | |
|---|---|
| அகிலவிராஜ் காரியவசம் | 286,155 |
| ஜே.சி.அலவத்துவல | 106,061 |

**ஐ.ம.சு.கூ.**

| | |
|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 423,529 |
| தயாசிறி ஜயசேகர | 133,832 |

**நுவரெலியா**

**ஐ.தே.க.**

| | |
|---|---|
| பி.திகாம்பரம் | 105,528 |
| வீ.இராதாகிருஷ்ணன் | 87,375 |
| எம்.திலகராஜ் | 67,761 |


ஐ.ம.சு.கூ

| | |
|---|---|
| ஆறுமுகம் தொண்டமான் | 61897 |
| முத்து சிவலிங்கம் | 45352 |

கம்பஹா

ஐ.தே.க.

| | |
|---|---|
| ரஞ்சன் ராமநாயக்க | 216463 |
| அர்ஜுன ரணதுங்க | 165890 |



# பஸ் பஞ்சராகிடுச்சே!




**நுவரெலியா மாவட்டத்தில் 11 பெண் வேட்பாளர்களை களமிறக்கி புதுப்புரட்சி செய்த முன்னாள் எம்.பி. ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணி படுதோல்வியைச் சந்தித்திருக்கிறது.**

11 பெருந் தோட்டப் பெண்களை நுவரெலியாவில் போட்டியிட வைத்துவிட்டு தான் தேசியபட்டியலில் பெயரை பதித்து கொண்ட ஸ்ரீரங்கா கடந்த ஒரு மாத காலமாக ஆடிய கூத்துக்கள் கொஞ்சம் நஞ்சமில்லை.

தமக்கிருக்கும் ஊடக(?)ஆதரவை வைத்துக்கொண்டு மிகப்பெரிய (நகைச்சுவை) திரைப்படத்தையே ஓட்டியிருந்தார். அவர் போட்ட அரசியல் குத்து கரணத்திற்கு மலையக மக்கள் இந்த பாடத்தை சொல்லியிருக்கிறார்கள்.

மலையக மக்களுக்கு கலாசார மண்டபம் கட்டி கொடுத்தேன்,கொப்பி கொடுத்தேன், மதுபானத்தை ஒழிக்க குரல் கொடுத்தேன் என வாரா வாரம் எதிரொலித்த ஸ்ரீரங்காவின் குரலுக்கு மலையக மக்கள் வழங்கிய வாக்கு இது தான் .நுவரெலியா-மஸ்கெலியா-1891
ஹங்குராங்கெத்த-121
வலப்பனை-98
கொத்மலை-129
தபால்மூலம்-11
மொத்தம் 2250

கடந்த பாராளுமன்ற தேர்தலில் 13948 வாக்குகளை கொடுத்து ரங்காவை அரியாசனம் ஏற்றிய மலையக மக்கள் இத்தேர்தலில் வெறும் 2250 வாக்குகளில் முடக்கியது ஏன் என்பதை ஸ்ரீரங்கா நிச்சயம் ஆராயவேண்டும்.

மலையக இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக தம்முடன் வந்து சேர்வதாகவும் நிச்சயம் பெண்கள் பாராளுமன்றம் தெரிவாவதாகவும் எதிரொலித்து வந்து (இன்னும் என்னென்னமோவெல்லாம் கூறியிருந்தீர்கள்) ஸ்ரீரங்காவிற்கு மலையக மக்கள் வழங்கிய சம்மட்டி அடி நிச்சயம் வலிக்கத்தான் செய்யும்.

தாம் தொகுத்து வழங்கிய மின்னல் நிகழ்ச்சியின் உண்மை தரம் வெளிவந்தமையால் ஊடகவியலாளர் தகுதியை கேள்விக்குட்படுத்திக்கொண்ட ஸ்ரீரங்கா இத்தேர்தல் முடிவின் மூலம் தான் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதி என்பதையும் பறைசாட்டிக் கொண்டுள்ளார்.

**எனினும் தேசியப்பட்டியல் அவருக்கு வாய்ப்பளிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

**தாசன்**

# வெள்ளை மாளிகை அதிகாரியாக திருநங்கை நியமனம்



அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகையின் அதிகாரியாக முதல்முறையாக திருநங்கையை ஒபாமா நியமித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகையின் பணியாளர் தெரிவு இயக்குநராக ரஃபி பிரீட்மேன்-குர்ஸ்பேன் என்ற திருநங்கை நியமிக்கப்பட்டுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில், அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள முதல் திருங்கை இவரே ஆவார். ரஃபி, இதற்கு முன்பு திருநங்கைகளின் சமத்துவத்துக்கான தேசிய மைய ஆலோசகராக பணியாற்றியவர்.

திருநங்கைகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக ரஃபி பிரீட்மேன்-குர்ஸ்பேன் உறுதி பூண்டிருப்பதற்கு, ஒபாமா அரசு மதிப்பளிக்கிறது என்பதை இந்த நியமனம் பிரதிபலிக்கிறது என்று, வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகர் வலேரி ஜாரெட் கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும், ரஃபி பிரீட்மேன்-குர்ஸ்பேனின் நியமனம், மூன்றாம் பாலின சமூகத்திற்கு ஒரு முக்கிய நிகழ்வு என்றும், அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றுகிறது என்பதை உறுதிப்படுத்தும் விதமாக இது உள்ளது என்றும் வழக்கறிஞர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத வீட்டுத் தாதிமார்கள் தேவை (கொழும்பு)
தகைமை :
ஆண்டு 10 க்கு மேல் கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
முதியோர் இல்லத்திற்கும் வேலையாட்கள் தேவை
உணவு, தங்குமிட வசதிகளுடன் மாத வருமானம்
ரூ.11,000 - 18,000/-
தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

BERROWNS
CHAMPIONS TRPOHY 2015
பதுளை பெரோன்ஸ் விளையாட்டுக்கழகம்,உதய சூரியன் பத்திரிக்கை மற்றும் பகி பாலசந்திரன் அமைப்புடன் இணைந்து நடாத்தும்
மென்பந்து கிரிகெட் சுற்றுபோட்டி
காலம் : 2015.08.22, 23
இடம் : பிரஜா சாலாவ மைதானம்
(2ம் கட்டை,பசறை வீதி ,உடவெல, பதுளை)
போட்டி விதிமுறைகள்
* அணிக்கு 7 பேரைக்கொண்ட போட்டியாகும்
* நுழைவு கட்டணம் 1500 /=
* ஒரு அணியில் விளையாடியவர் மற்றொரு அணியில் விளையாட முடியாது
* ஏற்பாட்டு குழுவினரின் விதிமுறைக ... ய பங்குபெறும் அணிகள் செயற்பட வேண்டும்
பரிசு விபரம்
* முதலாம் பரிசு 25,000/- + வெற்றி...
* இரண்டாம் பரிசு 15,000/- + வெற்...ன்...
* மூன்றாம் பரிசு 10,000/- + வெற்றிக்கிண்ண...
* சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் ...துவீச்சாளருக்கு சிறப்புக்கிண்ணம் வழங்கப்படு...
தொடர்புகளுக்கு
Ramanan : 076 7690001 chandra Mohan 076 7690004
அனுசரணை
உதய சூரியன் | பகி பாலசந்திரன் அமைப்பு - பதுளை

# 'மக்களின் தேவைகள், அபிலாசைகளை பூர்த்தி செய்ய பாடுபடுவேன்'

## -அரவிந்தகுமார்-



**ப**துளை மாவட்டத்தின் சார்பாக பாராளுமன்றத்திற்கு ஆகக்கூடிய விருப்பு வாக்குகளினால் என்னை தெரிவு செய்த பதுளை மாவட்ட தமிழ் பேசும் மக்களுக்கு எனது இதயம் கனிந்த, உணர்வு பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என தமிழ் முற்போக்கு கூட்டணியினின் உபதலைவரும், மலையக மக்கள் முன்னணியின் நிதிச்செயலாளருமான அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்:

என்னைப் பொறுத்தவரையில், எந்தவொரு அரசியல் சக்தியின் பலமில்லாமல், தனிநபராக தமிழ்பேசும் மக்களின் சக்தியை முன்னிலைப்படுத்தி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் களமிறங்கினேன்.

பதுளை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் என்மீது வைத்திருந்த அபார நம்பிக்கையின் பயனாக 53,741 வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளேன். ஆரம்பத்தில் நான் பதுளை மாவட்டத்திற்கு பிரவேசித்ததும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன்.

அக்காலப் பகுதியில், என்னால் இயன்றவரையில், எமது மக்களின் மேம்பாடுகளுக்காக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்டேன். ஆனாலும் அடுத்து வந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு, ஊவா மாகாணசபைக்கு தெரிவாக முடியவில்லை.

அதன் பின்னரே தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக ஐ.தே.க. பதுளை மாவட்ட பட்டியலில் போட்டியிட்டு, வரலாறு காணாத வெற்றியை எமது மக்கள் எனக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள்.

இந்த வெற்றியானது தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு, பதுளை மாவட்ட தமிழ் பேசும் மக்களினால் கிடைத்த பேரங்கிகாரமாகும். இவ்வெற்றியின் மூலம் பாராளுமன்றத்திற்கு செல்லும் நான் எமது மக்களுக்கான அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும், இயன்றவரையில் முன்னெடுப்பேன் என்றும், எமது மக்களின் எதிர்பார்ப்பின் அடிப்படையிலும், அம்மக்களது அபிலாசைகள், விருப்புக்கள், தேவைகள் ஆகியவற்றை பூர்த்தி செய்யவும் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகின்றேன்.

எனக்கு வாக்களித்த அதிபர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், சமூக நலன்விரும்பிகள், நகர வர்த்தக பிரமுகர்கள், சமூக முக்கியஸ்தர்கள், மலையக மக்கள் முன்னணியின் அலுவலக உத்தியோகஸ்தர்கள், பெருந்தோட்டத்துறை மக்கள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், அரச மற்றும் தனியார்த்துறை உத்தியோகத்தர்கள், வர்த்தக சிப்பந்திகள் மற்றும் சகோதர இனத்தவர்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்திய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.




உதயசூரியன் சிறு விளம்பரங்கள்

### தேவை

0112424702 கூடிய சம்பளத்திற்கு வேலை செய்வோமா? தொழிற்சாலைக்குள் (ஜேம், கோடியல், டொப்பி, பால்மா, க்ளவுஸ், டயர், ஆடை) லேபல்/பொதியிடல்/களஞ்சிய/ டெலிவரி பிரிவுக்கு 18-55 வயது வரை ஆ/பெ சேர்த்து கொள்ளப்படுவர். கண்டி, குண்டசாலை, திகன, பேராதனை, கம்பளை, நாவலப்பிட்டிய, ஹட்டன், நுவரேலியா, கடவத்தை, நிட்டம்புவ, குருணாகலை, மாத்தளை, சம்பளம் 38000/- வரை. ☎:0772015566. No. 37 குருணாகல ரோட், கட்டுகஸ்தோட்டை.

0114422124 "நீங்கள் தேடிய தொழில் எம்மிடம்" தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/பொதியிடல்/பிரிவுகளுக்கு (குளிர்பானம், சொக்லட், ஜேம், க்ளவுஸ், ஆடை) அனுராதபுரம், பொலன்னறுவ, மட்டக்களப்பு, வவுனியா, பதுளை, பண்டாரவெல, மற்றும், நாடு பூராகவும் இன்றே சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள், வயது 18-55 சம்பளம் 38000/- வரை. இப்போதே தொடர்புகளுக்கு. சிங்களம் கதைக்க தெரிந்தவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். ☎:077-8437254. No.40 பஸ்தரிப்பிடம், கதுருவெல.

0112424702 மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, ஹட்டன் பிரதேசங்களில் உள்ள எமது காரியாலயத்திற்கு பெண்கள் தேவை. வயது 18-35. சிங்களம் அவசியம். தனியார் வகுப்புகளுக்கு (Class) செல்லாதோர் அவசியம். சம்பளம் 15000/- (Phone Operator சாதாரண பெண் Clerk) No. 3 டேவிட் அவன்யு, மருதானை. ☎:0772449374, 0774567082, 0778430179.

இரத்மலானையில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு சமைத்தல், துப்பரவு செய்தல் போன்ற பணிகளுக்கு முன்னனுபவமுள்ள பணிப்பெண் தேவை. குடும்ப இடையூறுகள் இல்லாதிருத்தல் அவசியம். உரிமையாளரின் நேரடித் தொடர்புக்கு ☎:0777751788.

### மலையாள மாந்திரீகம்

சிவஸ்ரீ கேதீஸ்சாமி மலையாள மாந்திரீகம். சகல வித வசியங்கள், குடும்பபிரச்சனை மற்றும் தொழில் வியாபாரம், தீராத நோய், பேய், பிசாசு போன்ற பிரச்சனைகளுக்கு நாட வேண்டிய ஒரே இடம். பசுமலை கடை வீதி, ஹோல்புரூக். ☎: 072-8500007, 077-7883532.

### திருமண சேவை

மலையக, இந்திய வம்சாவளி வரன்களுக்கும் விவாகரத்தான வரன்களுக்கும் 100ற்கு மேற்பட்ட ஜாதகங்கள், படங்கள் கைவசம் உள்ளன. விபரங்களுக்கு SN திருமண சேவை. 4/2, Cargills Ground Complex, Nuwara Eliya. ☎: 072 - 434 6368 / 076-734 6368 / 075-209 5797 Branch: Nabeesha Shopping Complex, Kandy. ☎: 0812233193.


# "இந்த வாய்ப்பை மக்கள் பணிக்காக அர்ப்பணிப்பேன்"

## -வேலுகுமார்-



**இ**ருபதுவருட காலத்திற்குப்பின் கிடைத்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை மக்கள் பணிக்காக அர்ப்பணிப்பேன் என இருபது வருட காலத்திற்கு பின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினராக கண்டி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவர் வேலுகுமார் தெரிவித்தார்.


அவரது வெற்றி குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்;

கண்டி மாவட்டத்தின் இருபது வருடகால அரசியல் வரலாறு இன்று மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு அடிப்படையாக அமைந்தது எமது ஒற்றுமையே ஆகும். நாம் இம்முறை தனிப்பட்ட கட்சிகளாக அல்லாமல் கூட்டணியாகவே களம் இறங்கினோம். தலைவர் மனோ கணேசனின் தலைமையில் திகாம்பரம் மற்றும் இராதா கிருஷ்ணனுடன் இணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணியாக செயற்பட்டோம். அதன் மூலம் கொழும்பு, கண்டி, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை வென்றெடுத்திருக்கின்றோம். இது வடக்கு, கிழக்கிற்கு வெளியில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலத்தை எடுத்துகாட்டுகின்றது. எதிர்வரும் எட்டாவது பாராளுமன்றத்தை தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாக த.மு.கூட்டணி இன்று எழுர்ச்சி பெற்றிருக்கின்றது.

கண்டி மாவட்டத் தமிழர்களுக்கு இருந்த அரசியல் பின்னடைவு இன்று துடைத்தெறியபட்டிருக்கின்றது. எமக்கு 62,556 விருப்பு வாக்குகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றது. இது கண்டி மாவட்ட வரலாற்றில் தமிழ் வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்கு. எனக்கு இந்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றுத்தந்த தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சகோதரர்களுக்கு எனதும் எனது சமூகத்தினதும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இருபது வருடகாலத்திற்கு பின் கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை மக்கள் பணிக்காக அர்ப்பணிப்பேன். எனது பணிகள் இன, மத பேதமின்றி தொடரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

# பாராளுமன்றத் தேர்தல் 2015

## இறுதி முடிவுகள்




வரலாற்று ரீதியாக தேர்தல் ஆணையாளருக்கு வாழ்த்துக்கள் குவியும் ஒரு தேர்தலாக இந்தப் பாராளுமன்றத் தேர்தல் அமைந்துள்ளது. மிகவும் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியாக நடைபெற்ற தேர்தல் என சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. வாக்காளர்கள் சுதந்திரமாக செயற்பட்டார்களோ இல்லையோ தேர்தல் ஆணையாளர் தமக்கான முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி அனைவரையும் மூக்கில் விரல்வைக்கச் செய்ததோடு, வன்முறை என்ற பேச்சுக்கே இடமின்றி தேர்தலை நடத்தி முடித்திருக்கிறார்.

225 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கென கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 6,151 வேட்பாளர்கள் களமிறங்கியிருந்த இத்தேர்தலில் நாடு முழுதும் ஒரு கோடியே 50 இலட்சத்து 44,490 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தனர். எனினும் 11,684,098 வாக்காளர்களே வாக்களித்திருந்தனர். அவற்றில் 5,17,123 வாக்குகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 11,166,975 வாக்குகள் செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்கு சுதந்திரமான தேர்தலானாலும் இத்தேர்தல் ஐ.ம.சு. முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது. தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியாகும் வரை வெற்றிபெறும் கட்சியை ஊகித்துக் கொள்ள முடியாத நிலையே காணப்பட்டது.

சொற்ப வாக்குவீத வித்தியாசத்திலேயே ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. இரு கட்சிகளுமே மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறாத நிலையில் சுஆவது பாராளுமன்றத்தை அமைக்கும் அதிகாரத்தை 106 ஆசனங்களைக் கைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுவிட்டது. 95 ஆசனங்களைப் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒட்டுமொத்தமாக தோல்வியடைந்தது என சொல்லிவிட முடியாது. சம பலத்துடன் ஆட்சியமைக்கும் அதிகாரத்தை இழந்துள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி 6 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டதோடு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தலா ஒரு ஆசனத்தை கைப்பற்றியுள்ளன.

மேலும், தேசியப் பட்டியல் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி 13, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 12, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2, மக்கள் விடுதலை முன்னணி 2 என்ற ரீதியில் மேலதிக ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக ஐக்கிய தேசியக் கட்சி 5,098,927 [45.66%] வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4,732,669 [42.38%] வாக்குகளையும், மக்கள் விடுதலை முன்னணி 543,944 [4.87%] வாக்குகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 515,963 [4.62%] வாக்குகளையும் பெற்றுள்ளன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 33,481 [0.30%] வாக்குகளையும் பெற்றுள்ளதோடு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 44,193 [0.40%] வாக்குகளையும் பெற்றுள்ளது.

மாவட்ட ரீதியில் பார்க்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி 11 மாவட்டங்களில் வெற்றிபெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8 மாவட்டங்களை வெற்றிகொண்டுள்ளதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 மாவட்டங்களிலும் வெற்றியீட்டியுள்ளது.

### வெற்றியீட்டிய கட்சிகள் மாவட்ட ரீதியில் பெற்றுக்கொண்ட வாக்குகளும் ஆசனங்களும்

**கொழும்பு**

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்டத்தில் 640,743 வாக்குகளையும் 11 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 474,063 வாக்குகளையும் 7 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 81,391 வாக்குகளையும் 1 ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

இம்மாவட்டத்தில் 1,586,598 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தேதாடு 792 பேர் தேர்தலில் போட்டியிட்டிருந்தனர்.

**கம்பஹா**

ஐக்கிய தேசியக் கட்சி 577,004 வாக்குகள், 9 ஆசனங்கள்.

சுதந்திர முன்னணி 549,958 வாக்குகள் 8 ஆசனங்கள்.

ஜே.வி.பி 87,880 வாக்குகள் 1 ஆசனம்

இம் மாவட்டத்தில் 1,637,537 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**களுத்துறை**

களுத்துறை மாவட்டத்தில்
ஐக்கிய தேசியக் கட்சி- 310,234 வாக்குகள், 4 ஆசனங்கள்
சுதந்திர முன்னணி - 338,801 வாக்குகள், 5 ஆசனங்கள்
ஜே.வி.பி - 38,475 வாக்குகள் 1 ஆசனம்.

**கண்டி**

ஐக்கிய தேசியக் கட்சி - 440,761 வாக்குகள் 7 ஆசனங்கள்,
சுதந்திர முன்னணி 309,152 வாக்குகள் 5 ஆசனங்கள்
ஜே.வி.பி - 30,669 வாக்குகள், ஆசனம் இல்லை

**நுவரெலியா**

ஐக்கிய தேசியக் கட்சி- 228,920 வாக்குகள் 5 ஆசனங்கள்,
சுதந்திர முன்னணி 147,348 வாக்குகள் 3 ஆசனங்கள்

**மாத்தளை**

ஐக்கிய தேசிய கட்சி 138,241 வாக்குகள் 3 ஆசனங்கள்,
சுதந்திர முன்னணி 126,315 வாக்குகள் 2 ஆசனங்கள்
ஜே.வி.பி - 10,947 வாக்குகள்

**பதுளை**

ஐக்கிய தேசியக் கட்சி 258,844 வாக்குகள் 5 ஆசனங்கள்,
சுதந்திர முன்னணி179,459 வாக்குகள் 3 ஆசனங்கள்
மக்கள் விடுதலை முன்னணி 21,445 வாக்குகள்

**மொனராகலை**

ஐக்கிய தேசியகக் கட்சி 110,372 வாக்குகள் 2 ஆசனங்கள்
சுதந்திர முன்னணி 138,136 வாக்குகள் 3 ஆசனங்கள்
மக்கள் விடுதலை முன்னணி 13,626 வாக்குகள்

தொடர்ச்சி 26 ஆம் பக்கம்


## 01

நான் யார் தெரிகிறதா? கண்டுபிடியுங்கள்!







## 02





இந்தப் புன்னகைகளுக்கு சொந்தக்காரர்கள் யார் யார் எனக் கண்டுபிடியுங்கள் !

## ரியல் ஜோடி!




துல்கர் சல்மான் இவர் மலையாளம், தமிழ் திரைப்பட நடிகர். இவர் நடிகர் மம்முட்டியின் மகன் ஆவார். ஓ காதல் கண்மணி படத்தின் நடிகர். இவருடைய ரியல் லைப் ஜோடி அமல் சுபியா.

## 03



துண்டாக்கப்பட்ட இந்தப் படத்தில் தெரியும் சினிமா நடிகை யார் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

## 04


ஆறு வித்தியாசங்கள், கண்டுபிடியுங்கள்






## புதிர் 05

படங்களைப் பார்த்து தமிழ் திரைப்படங்களை கண்டுபிடியுங்கள்.





# மலையகத் தலைமைக் கிரீடம் திகாம்பரத்திற்கு!











**தமிழ் முற்போக்கு கூட்டணியா?
அது எங்கிருக்கிறது என ஒரு பேட்டியில் நக்கலாக
கேட்ட ஆறுமுகன் தொண்டமானுக்கு
இதோ நாங்கள் இருக்கிறோம்
உங்களுக்கு எதிரி(ல்) இருக்கிறோம் என
விஸ்வரூபம் எடுத்துக் காட்டியிருக்கிறது
தமிழ் முற்போக்கு முன்னணி!**

ஒரு, யாது காலமாக கோலாகலமாக நடந்துவந்த தேர்தல் திருவிழா சுபம் கண்டு விட்டது. இன்னும் 5 ஆண்டு, களுக்கு மக்கள் ஆணை கோரிய தலைவர்களுக்கு, மக்கள் ஜனநாயக ரீதியில் பதிலை வழங்கியுள்ளனர்.

மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் தமக்கு விருப்பமான தமக்கு சேவை செய்யக்கூடியவர்களென ஐந்து தமிழ் உறுப்பினர்களை தெரிவு செய்து கொண்டுள்ளனர்.

ஆறுமுகன் தொண்டமான், திகாம்பரம் கூட்டணிக்கிடையில் இடம் பெற்று வந்த மலையகத் தலைமைத்துவப் போட்டிக்கும் விடை கிடைத்தாயிற்று. மலையகத்தில் தமக்கே மக்கள் செல்வாக்கு அதிகம் என்று திரள் திரளாக மக்கள் கூட்டத்தை வெளியுலகிற்கு காட்டிய அனைவருக்கும் இன்று மக்கள் தகுந்த பாடத்தை சொல்லிவிட்டார்கள்.

மலையகத்தின் தலைமைத்துவம் இன்னும் 5 ஆண்டு களுக்கு யார் கைக்கு செல்லப்போகின்றது ? அதை கைப்பற்ற போவது யார்? எனும் கேள்வியை கடந்த வார கட்டுரையில் விட்டுச்சென்றிருந்தோம்.

மலையகத்தில் அதிக வாக்குகளை, அதிக ஆசனங்களைப் பெறுபவர்களே மலையகத் தலைவராக செல்வாக்கு மிக்கவராக உருவகப்படுத்தப்படும் போக்கு மலையகத்தில் எழுதப்படாத சட்டகமாக இருந்து வருகிறது. அதை இது வரை இ.தொ.கா கைப்பற்றி வைத்திருந்தது. இம்முறை அந்த தலைமைத்துவ நிலை கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் இ.தொ.கா.வின் மக்கள் செல்வாக்கின் மீதும் சம்மட்டி அடி விழுந்துள்ளது.

தான் எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் யார் பக்கம் நின்றாலும் மக்கள் தம்மை அரவணைத்துக் கொள்வார்கள் என இம்முறையும் வெற்றிலை சின்னத்தில் ஐக்கியமான இ.தொ.கா.வின் (?) அரசியல் சாணக்கியத்திற்கு மக்கள் தகுந்த பாடத்தை சொல்லியிருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 28 ஆம் பக்கம்)







**பதுளை மாவட்டத்தில் வெற்றிபெற்றவர்களின் விருப்புவாக்கு விபரம்**

| கட்சி | வேட்பாளர்கள் | விருப்பு வாக்கு |
|---|---|---|
| ஐ.தே.க. | ஹரின்பெர்னாண்டோ | 200,806 |
| | ரவீந்திர சமரவீர | 58,507 |
| | சமிந்த விஜேசிறி | 58,291 |
| | அரவிந்தகுமார் | 53,741 |
| | வடிவேல் சுரேஷ் | 52,378 |
| ஐ.ம.சு.மு. | நிமல் சிறிபாலடி சில்வா | 134,406 |
| | சாமர சம்பத் | 64,418 |
| | தேனுக விதானகமகே | 43,517 |



# பதுளை தமிழர்களுக்கு டபுள் ட்ரீட்

அரசியல்வாதிகளுக்கான மக்களின் தீர்ப்பும் வரமும் கடந்த 17 ஆம் திகதி வழங்கப்பட்டு விட்டது.

ஆட்சி மாற்றத்திற்கு நம்பிக்கையையும் அறிகுறியையும் வெளிப்படுத்திய பதுளை மாவட்டம் இம்முறை தமிழர் பிரதிநிதித்துவத்திலும் வியத்தகு மாற்றத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆம்! வரலாற்றில் முதல்தடவையாக பதுளையில் இரண்டு தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது நிச்சயம் பதுளை மாவட்டத் தமிழ் மக்களுக்கு கிடைத்த டபுள் ட்ரீட் என்றுதான் சொல்ல வேண்டும்.

## ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி!

விருப்பு வாக்குகளுக்கு கடுமையான போட்டி நிலவிய பதுளையில், தமிழர் வாக்குகளை குறிவைத்து பெரும்பான்மை வேட்பாளர்கள் பல்வேறு தேர்தல் வியூகங்களை வகுத்திருந்தனர். மறுபுறம் பதுளை மாவட்ட தோட்டப்புறங்களில் பல்வேறு தொழிற்சங்கங்களும் கட்சி களும் காணப்படுகின்றமையால் வாக்குகள் சிதறடிக்கப்படும் என்ற நிலையும் காணப்பட்டது.

ஆக, பதுளை மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இம்முறையும் கேள்விக்குறியாகவே காணப்பட்டது.

ஆனால், பதுளை மாவட்டத் தமிழ் மக்கள் கட்சி, தொழிற்சங்க, அரசியல், அரசியல்வாதிகளின் குறைபாடுகள் என்பவற்றை மூட்டை கட்டி வைத்துவிட்டு பல்வேறு சவால்களுக்கும் மத்தியில் அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலைபோகாமல் தமது சமூகக் கடமையை சரிவரச் செய்திருக்கின்றார்கள்.

ஒருமித்து வாக்களித்து மீண்டும் ஐ.தே.கட்சிக்கு ஆணை வழங்கியதுடன் தமிழர் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். விருப்பு வாக்குகள் மூலம் இருவரும் தேசியப் பட்டியல் மூலம் ஒருவரும் என மூவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் வரலாற்று சாதனை தமிழர் அரசியல் வரலாற்றில் பதுளையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழர்களினால் வெற்றி பெற்ற ஐ.தே.கட்சி

பதுளை மாவட்டத்தினைப் பொறுத்தவரை பெரும்பான்மையாக சிங்கள வாக்குகளே காணப்படுகின்றன. அத்தோடு எல்லாத் தேர்தல் தொகுதிகளிலும் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து வாழ்கின்ற பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. அதிலே ஒரு சில தொகுதிகளில் தமிழ் மக்கள் செறிவாகவும் ஒரு சில பிரதேசங்களில் சிறுபான்மையாகவும் வாழ்ந்துவருகின்றனர். இவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு மூலம் கடந்த காலங்களைவிட, கணிசமான இடைவெளிகளில் தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங்களில் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றுள்ளது.

குறிப்பாக பசறைத் தேர்தல் தொகுதியில் ஐ.தே.கட்சி 11806 வாக்குகளும், ஹாலிஎல தொகுதியில் 10887 வாக்குகளும், பண்டாரவளைத் தொகுதியில் 10497 வாக்குகளும், அப்புத்தளை தொகுதியில் 13274 வாக்குகளும், வெலிமடை தொகுதியில் 9959 வாக்குகளும் பெற்று ஐ.தே.க வெற்றிபெற்றுள்ளது.

இவ்வாறு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு வழங்கியதன் காரணமாகவே பசறை தேர்தல் வரலாற்றில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் 45,000 வாக்குகளை தாண்டாத நிலையில் இம்முறை அரவிந்தகுமார் 53,741 வாக்8குகளையும், வடிவேல் சுரேஷ் 52,378 வாக்குகளையும் பெற்று வெற்றிபெறக்கூடியதாக இருந்திருக்கிறது.

ஆக, தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கிய முழுமையான ஆதரவின் ஊடாகவும், சிந்தித்து வாக்களித்ததன் ஊடாகவும் தமிழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மை.

## இ.தொ.கா.வுக்கு பாடம் புகட்டிய மக்கள்

இ.தொ.கா.வை பொறுத்தவரை அக் கட்சியின் அரசியல் ஓரளவு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த நிலையில், இந்தத் தேர்தலிலும் அக் கட்சி எடுத்த மக்களின் விருப்பத்திற்கு மாறான முடிவுக்கு மக்கள் தகுந்த பாடத்தினை புகட்டியிருக்கிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் இ.தொ.கா. எடுத்த முடிவுக்கு எதிராக ஏகோபித்த எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். அதேபோல், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் அதே வகையான பதிலையே வழங்கியிருக்கிறார்கள். பதுளை மாவட்டத்தில் இ.தொ.கா. தனித்து களம் இறங்கியதை மக்கள் ஏற்றுக்கொள்ளாத அதேவேளை அக்கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் திட்டமிடாத தேர்தல் பிரசாரங்களாலும் இ.தொ.கா.வின் பதுளை மாவட்டத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற மாகாணசபை உறுப்பினர் செந்தில் தொண்டமானின் முழுமையான தேர்தல் பணிகள் காணப்படாத நிலையிலும் அக் கட்சிபடுதோல்வியை சந்தித்துள்ளது.

அத்தோடு, இ.தொ.கா. வேட்பாளர்கள் இ.தொ.கா. வாக்கு களை பங்கு போட்டுக் கொண்டார்களே தவிர, மாற்றுக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுவானவர்களின் வாக்குகளை கவர்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எப்படியிருந்தபோதும் பதுளை மாவட்ட தமிழ் மக்கள் ஐ.தே.கட்சி மீது கொண்டுள்ள ஆர்வத்தினால் மகிந்தவுடன் கூட்டணி அமைத்திருந்த இ.தொ.கா.வை கண்டுகொள்ளவில்லை என்பதே உண்மை. அத்தோடு இ.தொ.கா. எதிர்பார்க்கப்பட்ட தொகுதிகளில் கூட சொற்ப வாக்குகளையே பெற்றுக் கொண்டுள்ளது. அதாவது பசறைத் தொகுதியில் 2346 வாக்குகளையும், ஹாலி எல பகுதியில் 1167, பண்டாரவளை 1650 வாக்குகளையும், அப்புத்தளை பகுதியில் 2949 வாக்குகளையும், பதுளைத் தொகுதியில் 366 வாக்குகளையுமே பெற்றுக் கொண்டுள்ளது.

## அரவிந்தகுமாரிடமும் வடிவேல் சுரேஷிடமும் மக்கள் வைக்கும் பொதுவான வேண்டுகோள்

அரசியல், தொழிற்சங்க பேதம் மற்றும் வேட்பாளர்களின் குறைபாடுகளுக்கு அப்பால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற சமூக நோக்கோடு மாத்திரமே மக்கள் கணிசமான வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள்.

இந்த சமூக ரீதியான ஒற்றுமையின் மூலம் கிடைத்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வைத்துக் கொண்டு தொழிற்சங்கத்தை வளர்ப்பதும், தொழிற்சங்கம் சார்பான மற்றும் தேர்தலில் உதவி புரிந்தவர்களுக்கு மாத்திரம் சேவை செய்வதையும் தவிர்த்து, ஒட்டுமொத்தமாக அனைத்து தமிழ் வாக்காளர்களையும் சென்றடையும் வகையில் இவர்களது சேவை அமைய வேண்டும். பதுளை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக கணிசமான வாக்குகளை வழங்கி மக்கள் இருவரை வெற்றி பெறச் செய்திருக் கிறார்கள். இதனை தக்கவைத்துக்கொள்ள வேண்டியது மக்களதும் தலைவர்களதும் கடமை.

**எஸ்.மோகன்**

# 300 ஆண்டுகளாக பேய்கள் மட்டுமே வசிக்கும் சபிக்கப்பட்ட கிராமம்



நவீன அறிவியல் வசதிகள் நிறைந்த இந்த காலத்தில் வேலைவாய்ப்புக்காகவும், கல்வி மற்றும் இன்ன பிற வசதிகளுக்காகவும் மக்கள் கிராமங்களை காலிசெய்துவிட்டு நகரங்களுக்கு செல்வது வாழ்க்கையான ஒன்றுதான்.

ஆனால், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் 85 கிராமங்களை சேர்ந்த மக்களும் ஒட்டுமொத்தமாக கிராமத்தை விட்டு சென்ற சம்பவம் உங்களுக்கு தெரியுமா? ஆம் அந்த கிராமத்தின் பெயர் குல்தரா.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்சல்மெர் என்னும் மாவட்டத்தில் உள்ளது குல்தரா கிராமம். எங்கு திரும்பினாலும் மக்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் மட்டுமே வாழும் ஒரு சபிக்கப்பட்ட கிராமம்.

இந்த கிராமத்தின் வரலாறு 1291ஆம் ஆண்டில் இருந்து தொடங்குகிறது. பளிவால் பிராமனர்கள் என்ற சமூகத்தினர் செல்வ செழிப்புடன் வாழ்ந்த கிராமம் இது. இதனுடன் இணைந்து சுமார் 84 கிராமங்கள் இருந்தன.

இந்நிலையில் சலிம் சிங் என்ற திவான் கிராம தலைவரின் மகளின் அழகில் மயங்கி அவளை அபகரிக்கத் திட்டமிட்டான். இதன்படி அப்பெண்ணைத் தனக்கு திருமணம் செய்து தரவில்லை என்றால் மொத்த கிராமத்தையும் அழித்துவிடுவதாக எச்சரித்துள்ளான்.

அவனுக்கு தக்க பாடம் புகட்ட நினைத்த 85 கிராம மக்களும் 1825 ஆண்டு வாக்கில் கிராமத்தை மொத்தமாக காலி செய்து எங்கோ சென்றுவிட்டனர் என்று இந்த கிராமத்தின் வரலாறு கூறப்படுகிறது.

அதுமட்டுமில்லாமல் இந்த கிராமம் மனிதர்கள் வாழ்வதற்கு தகுந்ததாக இருக்கக் கூடாது என்று சாபமிட்டு சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அதன்படி கடந்த 300 ஆண்டுகளாக இப்பகுதியில் மனிதர்கள் யாரும் வசிக்கவில்லை என்றும் அதையும் மீறி வசிக்க முயற்சி செய்தால் இரவு நேரங்களில் அமானுஷ்ய உருவங்கள் தெரிவதாகவும், விநோதக் குரல்கள் கேட்பதாகவும் கூறப்படுகிறது.

இதனை பலரும் அனுபவித்துள்ளதாகவும் கூறுகின்றனர். எனினும், இப்பகுதியை பார்வையிடுவதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் சென்று திரும்பிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

# றொனால்டோவின் விநோத ரசிகர்!

நட்சத்திரக் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். ஆனால், 17 வயது ஷாண்டாவைப் போல் ஒரு ரசிகரை பார்த்திருக்க முடியாது. டென்மார்க்கைச் சேர்ந்தவர் ஷாண்டா. பல



இலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து தன்னை ஒரு றொனால்டோவாக மாற்றிக்கொண்டிருக்கிறார். தலை முடி, உடைகள், நடப்பது, பேசுவது என்று ஒவ்வொரு விதத்திலும் றொனால்டோவை அப்படியே செய்து காட்டுகிறார். தன்னுடைய பெயரையும் ஷாண்டா றொனால்டோவாக மாற்றிக்கொண்டு விட்டார். ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் அணிக்காக ஆடிவரும் றொனால்டோவை இந்த ஆண்டு மட்டும் 5 முறை சந்தித்துவிட்டார் ஷாண்டா.

# எப்படியெல்லாம் யோசிக்கிறாங்க பாருங்க!!!



சீனாவில் வசித்து வருகிறார் 39 வயது ஸெங். 2005ஆம் ஆண்டு ஓர் ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் பெற்றார். அப்பொழுது ஸெங் கர்ப்பமாக இருந்ததால் சிறையில் அடைக்கவில்லை. சிறைக்கு வெளியே அவரைப் பராமரித்து வந்தனர். குழந்தைப் பிறந்து சில மாதங்களுக்குப் பிறகு, ஸெங் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே நடைபெற்ற பரிசோதனையில் மீண்டும் கர்ப்பம் என்று தெரிய வந்தது. மீண்டும் சிறையில் இருந்து வெளியே அனுப்பப்பட்டார். இப்படிக் கடந்த 10 ஆண்டுகளில் 14 தடவை கர்ப்பமாக இருந்ததால் சிறையில் அடைக்கும் வாய்ப்பே கிடைக்கவில்லை. 13 கர்ப்பங்களை சிறையில் இருந்து வெளியே வந்தவுடன் கலைத்திருக்கிறார். பிரசவ காலம் வரை குழந்தையைச் சுமப்பதுபோல நடித்திருக்கிறார். தற்போது உண்மை கண்டுபிடிக்கப்பட்டு சிறைக்குள் சென்றுவிட்டார் ஸெங்.

# இதுதான் காதல் என்பதா...?

## மனைவியின் சடலத்துடன் படுத்துறங்கும் காதல் கணவன்!

காதலுக்கு கண் இல்லை என்பார்கள். ஆனால் கல்லறைக்கூட காதலைத் தடுக்க முடியாது என்று காண்பித்திருக்கிறார், வியட்நாமைச் சேர்ந்த இந்த விசித்திர மனிதர்.

காதலியோ, மனைவியோ இறந்துவிட்டால் அவள் நினைவுகளுடனும், நிழற்படங்களுடனும் வாழ்க்கை நடத்துகிற காதல் நாயகர்களைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இறந்து போன மனைவியின் சடலத்தைத் தோண்டி எடுத்து, அதை பொம்மையாகச் செய்து, அதனுடனேயே தன் முழு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார், 55 வயதான லீ வான்.



வியட்நாமிலுள்ள, க்வாங் நாம் பிரதேசத்தைச் சேர்ந்த இவர், 2003இல் தன் மனைவியை இழந்த சோகம் தாளாமல், தினந்தோறும் மனைவியின் கல்லறையைக் கட்டித் தழுவியபடியே உறங்கி வந்திருக்கிறார் லீ வான்.

சுமார் ஒன்றரை ஆண்டுகள் கழித்து, தன் மனைவிக்கும் தனக்கும் இடையே கல்லறைத் தடுப்பாய் இருப்பதாக உணர்ந்த லீ வான், கல்லறையின் பக்கவாட்டில் ஒரு சுரங்கம் போல் தோண்டி உள்ளே சென்று உறங்கப்போவதாகக் கூறியிருக்கிறார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் அவரைத் தடுத்துள்ளனர்.

நவம்பர், 2004ஆம் ஆண்டில் தன் மனைவியின் கல்லறையைத் தோண்டி, சடலத்தை வெளிக்கொணர்ந்தார், லீ. அச்சடலத்தின் மீதமிருந்த உறுப்புகளையெல்லாம் ஒன்றுதிரட்டி அவற்றின் மேல் நெகிழிப் பொம்மையைப் போல் ஒரு சட்டம் அடித்து அதைத் தைத்த லீ, அந்த பொம்மைக்கு தன் மனைவியின் உடைகளை அணிவித்து, தன் படுக்கையில் கிடத்திவைத்திருக்கிறார்.

மேலும் ஒரு அழகிய பெண் பொம்மையின் முகமூடியையும் அந்தச் சடலக்குவியலாலான பொம்மைக்கு அணிவித்த லீ, 2004ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அந்தப் பொம்மையைக் கட்டிப் பிடித்தவாறே உறங்குகிறார் லீ வான்.

இது குறித்து வியட்நாமிலுள்ள நாளிதழான லா ஒ டாங், லீ வானை அணுகியபோது அவர், நான் வித்தியாசமானவன்; மற்றவர்களைப்போல் எதையும் செய்யமாட்டேன். என் மனைவியின் உடல் மட்டுமே இறந்துபோனது. அவர் ஆன்மா எங்களுடன் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. எனவே, அவளது சடலத்துடன் வாழ்வதில் எனக்கு எந்த பயமுமில்லை, என்று அந்த பொம்மையைத் தழுவியபடி பேட்டி அளித்திருக்கிறார்.

காதலுக்கு கண்ணில்லை என்றாலும், காற்றுக்கு மாசு அபாயம் உண்டென்பதால், இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்போவதாக, க்வாங் நாம் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

# "அவள் என் பேச்சைக் கேட்கவில்லை கோபத்தில் குத்திவிட்டேன்"

## தங்கைக்கு எமனான அண்ணன்!



இன்று அற்ப, சொற்ப விடயங்களுக்கு கத்தியை தூக்குவதும், கொலை செய்வதும் சர்வ சாதாரண விடயமாகிவிட்டது.

பேசி தீர்க்கக்கூடிய விடயங்களுக்கெல்லாம் நொடிப் பொழுதில் கொலை, தற்கொலையென தீர்ப்பெழுதும் அவசரத்தனத்திற்கு கடந்தவாரம் அலவ்வ பகுதியில் நடந் கொலைச் சம்பவமும் ஒரு சான்று.

கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை. மாலை வேளையில் சுனில் (17 வயது) தன் தங்கையான சதுனியை (15 வயது) அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்று வருவதாக வீட்டில் கூறிவிட்டு வெளியில் வந்துள்ளான்.

வெளியில் சென்ற சுனில் சிறிது நேரத்திலேயே பதைபதைத்தபடி வீடு வந்து சேர்ந்துள்ளான். ஏன் மகன் என்ன நடந்தது? ஏன் பதைபதைக்கிறாய்? தங்கை எங்கே? என வீட்டார் கேட்க, நானும் தங்கையும் கடைக்குப் போகும் போது திடீரென அங்கு வந்த சிலர் என்னை தாக்கிவிட்டு தங்கையை கடத்திச் சென்று விட்டனர். நான் அவர்களிடமிருந்து தப்பித்து வந்துவிட்டேன். தங்கையை காப்பாற்ற எவ்வளவோ முயற்சி செய்த போதும் என்னால் முடியவில்லை என கண்ணீர் விட்டழுதான்.

தன் மகள் யாரோ சிலரால் கடத்தப்பட்டுள்ளாள் என்பதை அறிந்த சுனிலின் பெற்றோர் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். நம் மகளை கடத்துமளவிற்கு விரோதிகள் யாரும் இல்லையே? சிலவேளை சதுனிக்கு காதல் தொடர்பு இருந்திருக்குமோ? அவளை அவ்வாறு யாரும் கடத்தியிருப்பார்களோ? இல்லை யாருடனும் வீட்டை விட்டு வெளியேறியிருப்பாளோ என பல கோணங்களில் யோசித்தபோதும் அப்பெற்றோரால் எந்த உறுதியான முடிவுக்கும் வரமுடியவில்லை.

அலவ்வ, ஹதரலியத்த பகுதியெங்கும் இவ் விடயம் பரவ இரவிரவாக சதுனியை தேடி புறப்பட்டனர். எப்படித் தேடியும் சதுனி தொடர்பான எவ்வித சாதகமான துப்பும் கிடைக்கவில்லை. இறுதியில் இவ்விடயம் அலவ்வ பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

மறுநாள் பொழுது விடிந்தது. ஊராரின் தேடுதல் வேட்டையும் தொடர்ந்தது. "என் மகளுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது. நல்லபடியாக அவள் வீடு வந்து சேர வேண்டும்" என்ற அந்தப் பெற்றோரின் அனைத்து வேண்டுதல்களும் இறைவனை எட்டாமலே போனது.

பாசத்தைக் கொட்டி வளர்த்த அவர்களின் அன்பு மகள் ஹத்தரலியத்த பாழடைந்த தோட்டப் பகுதியில் கத்தியால் கோரமாக வெட்டி, குத்தி கொல்லப்பட்டு சடலமாக காட்சியளித்தாள்.

தன் மகளை இவ்வளவு கொடூரமாக கொலை செய்தது யார்? என்ன காரணமாக இருக்கும்? நாம் யாருக்கும் எந்த பாதகமும் செய்யவில்லையே? ஏன் கடவுளே இவ்வளவு பெரிய சோகத்தை தந்தாய்? என அப்பெற்றோர் அழுது தீர்த்தனர்.

தன் தங்கையை இவ்வளவு கோரமாக கொலை செய்தவர்களை நான் சும்மாவிட மாட்டேன் என சுனில் கொந்தளித்தான். தன் தங்கையை பார்த்து கண்ணீர் விட்டான்.

சதுனி கொலை செய்யப்பட்டு சடலமாக இருக்கும் தகவல் அலவ்வ பொலிஸுக்கு செல்ல உடனே விரைந்த பொலிஸார் அப் பகுதியை சோதனைக்கு உட்படுத்தினர். இரத்தக் கறையுடன் அவளின் உடை அத்தோட்டத்திலுள்ள வீட்டருகில் கண்டெடுக்கப்பட்டது. சதுனியின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு அனுப்பிய பொலிஸார் அந்த வீட்டில் இருந்து தோட்ட காவல்காரனையும் அவனது மனைவியையும், சந்தேக த்தின் பேரில் கைது செய்தனர். அவர்களை விசாரித்ததில் "எமக்கு எதுவும் தெரியாது" எனும் பதிலைத் தவிர அவர்களிடமிருந்து வேறு எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இந்நிலையில் தனது விசாரணை கோணத்தை மாற்றிய பொலிஸார் சதுனியை அன்று மாலை அழைத்துச் சென்ற அவள் அண்ணன் சுனிலை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தினர். பொலிஸாரின் கேள்விக் கணைகள் அவனை திக்குமுக்காட வைத்ததோடு, மாறுபட்ட கருத்துக்களைக் கூறத் தொடங்கியுள்ளான். சுனிலின் வாக்கு மூலம் சந்தேகத்தை ஏற்படுத்த பொலிஸார் அவனை விசேட கவனிப்புக்கு உட்படுத்த அனைத்து உண்மைகளும் அம்பலமாகின.

"எனது தங்கை மீது நான் அதிக பாசம் கொண்டவன். அவள் இரகசியமாக யாரோ ஒருவனை காதலிப்பதாக கேள்விப்பட்டேன். முதலில் அவளை அழைத்து கண்டித்தேன். அவள் பாவித்த தொலைபேசியையும் தடை செய்தேன். எனினும் அவள் என் பேச்சைக் கேட்க வில்லை. தொடர்ந்து அவள் காதல் விடயத்திலேயே நாட்டம் கொண்டிருந்தாள். அவள் தொடர்பாக பல்வேறு விடயங்களை கேள்விப்பட்டதால் அவள் மீது கோபம் வந்தது. அன்று மாலை நான் கடைக்கு அழைத்துச் செல்லும் போது இக்காதல் விவகாரத்தை விட்டுவிடும் படி கூறினேன். அப்போது எம்மிருவருக்குமிடையில் வாக்குவாதம் முற்றிவிட்டது. என் பேச்சைக் கேட்காத அவள் மீது ஏற்பட்ட கோபத்தால் கத்தியால் குத்திவிட்டேன் என அவன் வாக்குமூலம் கொடுத்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சதுனியை கொலை செய்ய பயன்படுத்திய கத்தி புதன்கிழமை (12ஆம் திகதி) கண்டெடுக்கப்பட்டது. கொலை செய்யும் நோக்கத்தில்தான் அவன் தன் தங்கையை அழைத்துச் சென்றானா? இக்கொலைக்கு வேறேதும் பின்னணி இருக்கிறதா? காதல் செய்ய வேண்டாம் எனும் அவன் பேச்சை மீறியதற்காக இவ்வளவு வன்மமாக செயற்பட்டிருப்பானா? என்பதையும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

எனினும் சுமூகமாக பேசித் தீர்த்திருக்கக் கூடிய இவ் அற்ப விடயத்திற்கு கொலையென தீர்ப்பெழுதி பலியிட்டதை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது போல அவனின் அவசரத்துக்கு ஒரு உயிர் பலியெடுக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை!

**தாசன்**



மாத்தளை நாட்டுக்கோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய ஆடிவேல்விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது வசந்தமண்டப பூஜையுடன் தேர் நகர்வலம் வருவதையும் கேரள செண்டைமேளம், மானாட்டம், மயிலாட்டங்கள் இடம்பெறுவதையும் இங்கு காணலாம்.

இரத்தோட்டை நிருபர்

# விளம்பரத்தால் வந்த வினை



இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் கெப்டன் தோனி, உலகளவில் மதிப்புமிகுந்த விளையாட்டு வீரர்களில் ஒருவர். இந்தியாவின் பிரபல நிறுவனங்கள் தோனியை வைத்து விளம்பரம் செய்ய துடித்துக் கொண்டிருக்கின்றன. தோனியின் ஆண்டு வருமானம் 31 கோடி ரூபாய் என்றால், அதில் 27 கோடி, விளம்பரம் மூலம் மட்டுமே வருவாயாக கொட்டுகிறது.

தோனி விளம்பர மதிப்பு மிக்கவீரர். அதிக விளம்பரங்களில் அவர்தான் தோன்றுகிறார் என்பதை குறிக்கும் வகையில், பிரபல வணிகப் பத்திரிகை ஒன்று தோனியை




விஷ்ணு போல சித்திரித்து. அட்டைப்படம் வெளியிட்டது. அதில் அவரது கையில் காலணியும் இருந்தது.

தோனியின் இந்தப் புகைப்படம் இந்து மத உணர்வுகளை புண்படுத்துவதாக கூறி, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் சமூக சேவகர் ஒருவர் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு கடந்த வாரம் நீதிபதி வேணுகோபால் கவுடா முன்பு விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது நீதிபதி, தோனி போன்ற பிரபலங்களுக்கு மக்களின் மத உணர்வுகள் பாதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் தெரிந்திருக்க வேண்டும். பிரபலங்கள் பணத்துக்காக பின்விளைவுகள் பற்றி யோசிக்காமல் விளம்பர ஒப்பந்தங்களில் ஈடுபடுகிறார்கள் என்று வேதனை தெரிவித்தார்.

தோனி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பணம் வாங்கிக் கொண்டு தோனி இப்படி நடிக்கவில்லை என்று பதிலளித்தார்.

## அவுஸ்திரேலியாவை பதம் பார்க்குமா பங்களாதேஷ்?




பாகிஸ்தான், இந்தியா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற மிக சிறந்த டெஸ்ட் அங்கத்துவம் பெற்ற பெரும் தலைகளை எல்லாம் புரட்டிப் போட்ட பங்களாதேஷ் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தொடை தட்டி காத்திருகிறது. ஆஷஷ் தொடரில் இங்கிலாந்திடம் பலத்த அடி வாங்கிக் கொண்டிருக்கும் அவுஸ்திரேலியா அடுத்து பங்களாதேஷ் சென்று 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

இம்முறை உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷ் அணி முதன் முறையாக கால் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது. அது ஒன்றும் அதிஷ்டவசமாக நடைபெற்ற விடயம் இல்லை என்பதை நிரூபிக்க பாகிஸ்தான், இந்தியா,தென்னாபிரிக்க அணிகளை பதம் பார்த்தது மட்டுமல்லாமல் சாதனையுடன் வெற்றி பெற்றது. இதன் மூலம் நமது அணி மீதான ரசிகர்களின் பார்வையை அதிகரித்துக் கொண்டது.

இதன்படி வரும் அக்டோபர் மாதம் 09ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பிக்கிறது. இப்போட்டியில் பங்களாதேஷ் எத்தகைய சவால் அவுஸ்திரேலிய அணிக்கு கொடுக்கப்போகிறது என ரசிகர்கள் ஆவலோடு காத்திருக்கின்றன. கடந்த 2006ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா அணி பங்களாதேஷ் சென்று 2 டெஸ்ட் போட்டி களில் விளையாடி வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

கா.சந்திரன்

## கால்கள் இல்லாமலே மல்யுத்தத்தில் சாதிக்கும் சிறுவன்



வாழ்க்கையில் ஏதும் இல்லாமல் எல்லாவற்றையும் இழந்துவிட்ட பின்பும் கூட, நாம் வாழ்வதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். அப்படிப்பட்ட காரணத்தைக் கண்டுபிடிப்பவர்கள் சாதனையாளர்கள் ஆகிறார்கள்.

அப்படியொரு சாதனையாளன்தான் ஆறு வயதே நிரம்பிய ஐசயா பேர்ட் (isaiah bird). நியூயோர்க்கில் வாழ்ந்து வரும் ஐசயா பேர்ட், தங்குவதற்கு என்று வீடும் இல்லை, நடப்பதற்கு என்று கால்களும் இல்லை. பிறக்கும் போதே கால்கள் இல்லாமல் பிறந்த ஐசயா, தன் குடும்பத்துடன் ஒரு சர்ச்சில் கூடாரம் போன்ற இடத்தில் வசித்து வருகிறான். இப்படியொரு மோசமான சூழ்நிலையில் பிறந்த ஐசயா, இப்பொழுது ஒரு மல்யுத்த வீரன். இந்த சிறுவனை கண்ட ரோட்ரீகஸ் என்ற மல்யுத்த பயிற்சியாளர், இவனது கைகளை மல்யுத்த பக்கம் நடக்க வைத்துவிட்டார்.

மல்யுத்தத்திற்கு கைகள்தான் தேவை, கால்கள் இல்லை என்பதால் விளையாடத் தொடங்கிய ஐசயா, இன்று அவனுடன் மல்யுத்தம் செய்யும் சிறுவர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்கிறான். கால்கள் இல்லாததால் மற்ற சிறுவர்களை விட ஐசயா அதிக வேகத்துடன் சண்டையிட வேண்டும். ஆனால், ஐசயாவோ எல்லாத் தடைகளையும் மீறி கடந்த ஆண்டில், அதிக அளவிலான போட்டிகளை வென்று, தற்போது மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளான்.

கால்கள் இல்லாமல் சண்டையிட்டு, தன் போட்டியாளர்களை வீழ்த்திவிட்டு ஒய்யாரமாக அமர்ந்து, " I love to win, I am the gladiator, I am the champion" என்று சொல்வதை விடவா வேறு தன்னம்பிக்கை வார்த்தைகள் இருந்துவிடப்போகின்றன.



## ஓராண்டில் ரூபா 194 கோடி சம்பாதிக்கும் வீராங்கனை.

இந்த ஆண்டில் அதிகம் சம்பாதித்த வீராங்கனைகளின் பட்டியலை அமெரிக்க வணிக பத்திரிகையான போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை ரூபா 194 கோடி சம்பாதித்து ரஷ்ய டென்னிஸ் புயல் மரியா ஷரபோவா முதலிடத்தை பிடித்துள்ளார். அதில் அவரது பரிசுத்தொகை வெறும் 43 கோடி தான். ஆனால் விளம்பரம் மற்றும் வர்த்தகம் மூலம் ஷரபோவா கைநிறைய சம்பாதிக்கிறார். தொடர்ந்து 11 ஆவது ஆண்டாக இந்த பட்டியலில் ஷரபோவா முதலிடத்தில் தொடர, நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனை அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

## இளமை புதுமை!




## நூல் அறிமுகம்



வாசிப்பு அறிவை விசாலப்படுத்துகிறது. வாசிப்பு ஒருவர் சிந்தனையை அடுத்த தளத்திற்கு கொண்டு செல்கிறது. உதயசூரியனின் இப்பகுதி ஊடாக நல்ல நூல்களை அறிவோம், வாசிப்போம், நம்மை நாமே விசாலப்படுத்திக் கொள்வோம்.

# நெல்சன் மண்டேலா




மனிதனும் அல்லாத விலங்கும் அல்லாத நிலையில் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டது. செல்வங்கள் சுரண்டப்பட்டன.

உயிரி மனிதனாக மாற சுதந்திரம் தேவை அந்த சுதந்திரத்தை அடைய வீரம் செறிந்த மிக நீண்ட போராட்டம் தேவை என்பதை உணர வைத்து தென்னாபிரிக்க கறுப்பின மக்களினுடைய சுதந்திரத்துக்கு இன்றியமையாத காரணியாக விளங்கியவர் நெல்சன் மண்டேலா.

தமது வாழ்நாளில் கிட்டத்தட்ட 27 வருடங்கள் [15 ஆயிரத்துக்கு மேற்பட்ட நாட்களுக்கு மேல்] சிறையில் கழித்த இந்த நூற்றாண்டின் மாபெரும் மானுட போராளி. 1958 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெள்ளையின அரசுக்கு எதிராக கறுப்பின மக்கள் சார்பில் குரல் கொடுக்க ஆரம்பித்த போது, இனவெறி தென்னாபிரிக்க மண்ணில் ஊறி கிடந்தது. கறுப்பின மக்கள் நெஞ்சத்தில் இரத்தம் சொட்ட கண்களில் கண்ணீர் சொட்ட போராடிய காலகட்டம் அது. இதனை எதிர்த்துப் போராடிய போதுதான் ஆயுத போராட்டத் தலைவனாக, தேச துரோகியாக குற்றம் சுமத்தப்பட்டு ராபான் சிறையில் வைக்கப்பட்டார். இந்த அஹிம்சை வழி போராட்டம் தான் இன்றைய தென்னாபிரிக்க மக்களினுடைய விடுதலை வேட்கை.மண்டேலாவைப் போல மிக நீண்ட காலம் சிறையில் வாடிய தலைவர்கள் கிடையாது.

இவ்வாறு பக்கத்துக்கு பக்கம் விடுதலை என்ற உச்ச உணர்வோடு நெல்சன் மண்டேலாவினுடைய விடுதலை வேட்கையை மையமாக வைத்து எழுத்தாளர் மருதனினால் தொகுக்கப்பட்ட மிகச்சிறந்த தேடல் மிக்க நூல் இது. வரலாற்றின் மிக நீண்ட சிறைவாசியாக, கறுப்பின மக்களின் மீட்பராக, இன ஒதுக்கல் எதிர்ப்பாளராக மனித உரிமைக் காப்பாளராக அநீதிகளுக்கு எதிரான எதிர்ப்பாளராக மானிடத்தின் அடையாளமாக நெல்சன் மண்டேலா அறியப்படுகின்றார்.

இந்த புத்தகம் நெல்சன் மண்டேலோவின் வாழ்க்கையினூடாக தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலை போராட்டத்தின் வரலாறு. நிச்சயமாக நம்மில் பல பேரால் வாசிக்கபட வேண்டிய நூல்.

# மீண்டும் சந்தையில் நோக்கியா




NOKIA
Connecting People

ஸ்மார்ட் போன்களின் வருகை காரணமாக கைத் தொலைபேசி விற்பனையிலிருந்து வெளியேறிய ( Nokia ) மீண்டும் தனது மேல் வருகையை அறிவித்துள்ளது.விரைவில் அதே தரத்துடன் நோக்கியா கைத்தொலைபேசிகள் பாவனைக்கு வர உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு நோக்கியா நிறுவனம் மைக்ரோசொப்ட் நிறுவனத்திடம் தமது வியாபாரத்தை கையளித்த பின்னர் தொலை தொடர்பு சாதனங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வந்தது. எனினும். மைக்ரோசொப்ட் நிறுவனத்துடனான ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டு நிறைவு பெறுவதன் காரணமாக இதன் பின் நோக்கியா நிறுவனத்தின் மீள் வருகை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கடந்த ஜனவரி மாதம் முதல் நோக்கியா நிறுவனம் பல android அப்ளிகேசன்களையும், tablet, புதிய கேமராக்களையும் இதுவரை சந்தைக்கு அறிமுகப்படுத்தியும் உள்ளது. தவிர, குறித்த நிறுவனத்துக்கு வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கப்பட உள்ளன.

# Android போன்களுக்கு போட்டியாக Mozila




கணினிகளில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்த தேடு பொறியாக இருந்தது mozila fairfox. அதில் தான் பெற்றிருந்த செல்வாக்கை இழந்திருந்த காரணத்தினால் தற்போது ஸ்மார்ட் போன்களின் பக்கம் தன் சிவிகோன் தலையை திருப்பியுள்ளது.

அடுத்து வருகின்ற 2016 இல் H506 என்ற இயங்கு பொறியை அறிமுகப்படுத்தும் முடிவில் உள்ளது இந்த நிறுவனம். இது குறித்து மொசிலாவின் முன்னாள் தலைவரான சீனாவைச் சேர்ந்த லீகோன் செய்தியாளர்களிடம் கூறும் போது இப்போது பயன்பாட்டில் இருக்கும் இயங்குபொறிகள் எல்லாவற்றையும் விட அதிக சக்தி வாய்ந்த எளிமையான H505 என்ற இயங்கு பொறி அறிமுக படுத்தப்படும் என கூறியுள்ளார்.



## மிதி மிதினு மிதிச்சா போன் சார்ஜாகும்....

வழக்கமாக போன் சார்ஜ் இல்லை என்றால் தூக்கிப்போட்டு மிதி மிதியென்று மிதிக்கத் தோன்றும் ஆனால், இப்போது அதுவே தொழில்நுட்பமாக மாறியுள்ளது. இதற்கு பவர் பம்ப் சார்ஜர் என பெயர் வைத்துள்ளனர். சைக்கிள்களுக்கு காற்று அடிப்பது போல, போட்டு மிதிக்க மிதிக்க போனுக்கு சார்ஜ் ஏறும்படி வடிவமைக்கப்பட்ட சார்ஜர்..)




## 20 மொழிகளுக்கான செயலி அறிமுகம்

மைக்ரோசொப்ட் நிறுவனம் 50 மொழிகளுக்கான மொழிபெயர்ப்பு செயலியை (translater app) அறிமுகம் செய்துள்ளது இது கூகுள் translater ஐ விடவும் வசதியானது. கூகுளில் 27 மொழிகளுக்கு மட்டுமே மொழிபெயர்ப்பு செய்ய முடியும்.

மைக்ரோசொப்ட் translater , android ,ios விண்டோஸ் என எல்லா இயங்கு தளத்திற்கும் கிடைக்க கூடியதாக இருக்கிறது.இத் தொழில்நுட்பத்தை நவீன தொழில்நுட்ப சாதனங்களில் இலகுவாக பயன்படுத்த முடியும் என மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. தவிர ஒருவர் ஒரு மொழியில் பேசவோ, எழுதவோ (டைப்பிங் ) செய்தால் இதை இன்னொரு மொழிக்கு ( குறிப்பிட்ட மொழிகளுக்குள் மாற்றிக் கொள்ள முடியும்).

கா.சந்திரன்

# தேர்தல் செலவு எவ்வளவு?

இத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்தது முதல் தேர்தல் பிரசாரம் முடியும் வரை உறுப்பினர்கள் பாரியளவு பணத்தை வாரியிறைத்து பிரசாரத்தை முடுக்கிவிட்டிருந்தனர். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, போஸ்டர் என, பணம் மில்லியன் கணக்கில் அள்ளி வீசப்பட்டிருந்தது. இவர்களிடம் இவ்வளவு பணம் இருக்கிறதா என வாயை பிளக்குமளவுக்கு அவர்களின் தேர்தல் செலவுகள் காணப்பட்டன. அதில் சிலரின் தொகுப்பை இங்கு தருகின்றோம்.

**120 இலட்சம் - ரஞ்சன் ராமநாயக்க**



இத் தேர்தலில் பணம் செலவு செய்யவில்லை என யாரும் கூறினால் அது அப்பட்டமான பொய். எனக்கு தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, போஸ்டர் என்பவற்றுடன் எனது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஆதரவாளர்களுக்கு உணவு, வாகனத்துக்கு பெற்றோல் என ஒருமாத காலத்தில் சுமார் 120 இலட்சம் செலவாகியது என்று தெரிவித்திருக்கிறார்.



**வெறும் 1500 ரூபாதான் - குமார் வெல்கம**

எனக்கென்றால் பெரியளவில் பணம் செலவாகவில்லை. மற்றது எவ்வளவு செலவானது என்று கணக்கு பார்க்கவுமில்லை. சுமாராகச் சொன்னால் என் கையில் 1500 ரூபா செலவாகியிருக்கும். (உண்மையாவா?)

**90 இலட்சம் - உதய கம்மன்பில**



இன்னும் சரியாக செலவு கணக்கு வழக்கு பார்க்கவில்லை. இருந்தாலும் இதுவரை தேர்தல் செலவிற்காக சுமார் 10 இலட்சம் (9 மில்லியன்) ரூபா செலவாகியிருக்கிறது.


**150 இலட்சம் - சீ.வி.அலவத்துவல (ஐ.தே.க.)**

எனக்கென்றால் மிகப்பெரிய தொகை செலவாகியது. சுமார் 150 இலட்சம் அளவில் செலவாகியிருக்கும்.

இவ்வாறு சில உறுப்பினர்கள் மனம் திறந்து கருத்து தெரிவித்திருந்தனர்.

மலையகக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் பெருந்தொகை பணத்தை வாரி இறைத்து பிரசாரம் செய்திருந்தனர். இந்திய பாடகர்கள் மூலம் பாடல் இயற்றியிருந்தனர். பத்திரிகை, வானொலி பிரசாரங்கள் பெரியளவில் காணப்பட்டன. இவர்களின் தேர்தல் செலவு எவ்வளவு என்பதை அறிய முயற்சித்த போதும் அது கைகூடவில்லை. ஆனால், மலையகக் கட்சிகளின் தேர்தல் செலவுகள் பல மில்லியனைத் தாண்டியிருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது என நினைக்கிறோம்.

தாசன்




# கல்யாணமாம் கல்யாணம்!



**டோமினிக் லெஸ்பிரல் என்பவர் 41 வயது டச்சு பெண்மணி. கிட்னி செயலிழப்பால் இவர் கணவர் இறந்துவிட 16 ஆண்டு கால இனிய வாழ்க்கை முடிவுக்கு வந்தது. இப்போது இவருக்கு மீண்டும் காதல் பூத்திருக்கிறது. மறுமணம் செய்யப்போகிறார். இதெல்லாம் வெளிநாட்டுல சகஜமப்பா என்கிறீர்களா?**

**டோமினிக்கின் முன்னாள் கணவர் ஒரு பூனை.**

**இப்போது அவர் மணந்துகொள்ள இருப்பது ஒரு நாயை. எப்படி இருக்கு ?**



டோமினிக்கின் கணவரான மறைந்த அந்தப் பூனையின் பெயர் டோரியாக். இன்று காதலனாய் பதவி வகிப்பவர் பெயர் ட்ராவிஸ்.

டோரியாக் தன் மூன்று வயதில் இருந்து என்னோடு இருந்தான். அவனை எனக்குப் பிடிக்கும் என்றாலும் எட்டு ஆண்டுகளுக்கு முன்புதான் திருமணம் செய்தேன். காரணம் திருமணம் என்பது அவசரப்பட்டு முடிவு செய்கிற ஒரு விஷயம் அல்ல. டோமினிக் தற்போது ட்ராவிஸை திருமணம் செய்யலாமா? வேண்டாமா? என மனப் போராட்டத்தில் இருக்கிறார்.



முதல் கணவர் இறந்து இவ்வளவு சீக்கிரம் அடுத்தவரை ஏற்க அவர் மனம் ஒப்பாததுதான் காரணம்.

ட்ராவிஸ் தெருநாயாக அவதிப்பட்டவன். நான் தினமும் குளிக்கும் கடற்கரைக்கு வந்து குப்பைகளில் மேய்வான். நான் அவனுக்கு உணவு கொடுத்திருக்கிறேன். அப்புறம் ஜாலியாக என்னோடு விளையாட ஆரம்பித்தான். குளிக்கும்போது உடைகளைத் திருடிக்கொண்டு போவான். அப்படியே என் மனதையும் திருடி விட்டான் எனத் தன் மாயக்கண்ணனைப் பற்றி நெகிழும் டோமினிக் தன்னைப் போலவே விலங்குகளை திருமணம் செய்துகொள்ள நினைப்பவர்களுக்காக Marryyourpet.com என்ற இணையதளத்தை நடத்துகிறார். செல்லப் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் அதன் மூலம் ஒன்லைன் திருமணமும் செய்து வைக்கிறார்.

நாம் எல்லோருமே நிபந்தனையற்ற உண்மையான அன்புக்கு ஏங்குகிறோம். அது மனிதர்களிடம் கிடைப்பது அரிதெனும்போது இந்தத் திருமணங்களில் என்ன தப்பு? என்று கேள்வி எழுப்புகிறார் டோமினிக்.






# வீதி புனரமைக்க வேண்டும்! மக்கள் கோரிக்கை

மஸ்கெலியா நகரிலிருந்து காட்மோர் செல்லும் பிரதான வீதியில் மல்லியப்பு சந்தி முதல் காட்மோர் வரையிலான 5 கிலோமீற்றர் வீதி குன்றும் குழியுமாக உள்ளதால் பயணிகள், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இவ்வீதியானது மத்தியமாகாண வீதி அதிகாரசபையின் கீழ் உள்ளதால் மத்திய மாகாண வீதி அதிகாரசபை மற்றும் மத்திய மாகாண பெருந்தெருக்கள் அமைச்சு முன்வந்து இவ் வீதியை புனரமைக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

செ.தி.பெருமாள்
மஸ்கெலியா

# எழுத்துப் பிழைகளுடன் வாக்காளர் அட்டை விநியோகம்!



-சிவா ஸ்ரீதரராவ்-

நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்ட வாக்காளர் அட்டையில் தமிழ்க்கொலைகள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பெயர்களில் பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதால் தமது அட்டைகளை இனங்காண்பதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதாக தமிழ் வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நாட்டில் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்த்து கொடுத்துள்ளதாக கூறுகின்ற போதிலும் தமிழ் மக்களின் உரிமையான வாக்காளர் அட்டையில் தமிழ் எழுத்து பிழைகள் இடம்பெற்றுள்ளமை கவலைக்கும் கண்டனத்திற்குரியது.

# பல்வேறு குறைபாடுகளுடன் கினிகத்தேனை பஸ் நிலையம்



கினிகத்தேனை பஸ் நிலையம் முறையான பராமரிப்பின்றி உடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

கினிகத்தேனை பஸ் நிலையமானது இப்பகுதியில் ஓர் மத்திய நிலையமாக காணப்படுகின்றது.


குறிப்பாக கண்டி, கொழும்பு, அவிசாவலை, நாவலப்பிட்டி போன்ற பிரதேசங்களுக்குச் செல்வதற்கு இப்பஸ் நிலையத்தையே பயன்படுத்துகின்றனர்.

இருந்த போதிலும் இப்பஸ் நிலையம் மோசமான நிலையில் காணப்படுவதுடன் போதுமான வசதிகளும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

காற்று, மழை காலங்களில் பஸ் தரப்பிடத்திற்குள் மக்கள் இருக்க முடியாத நிலையே காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பல குறைபாடுகளுடன் காணப்படும் பஸ் நிலையத்தை மக்கள் சிரமமின்றி பயன்படுத்தக்கூடியவாறு நவீன முறையில் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இ.தொ.கா. காரியாலயத்திற்கு சீல்!



அட்டன் மல்லியப்பு சந்தியில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் காரியாலயத்திலிருந்து உணவுப் பொருட்கள் அடங்கிய 19 பொதிகள் மீட்கப்பட்டதையடுத்து அக்காரியாலயத்துக்கு சீல் வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் உணவுப் பொதிகள் வாக்காளர்களுக்கு வழங்கப்படவிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் அதுதொடர்பில் தமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே காரியாலயத்துக்கு சீல் வைத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒவ்வொரு பொதியிலும் 3 கிலோகிராம் அரிசி, 1 கிலோகிராம் கிழங்கு, 2 சேமன் டின்கள் மற்றும் மிளகாய் தூள் 50 கிராம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



பதுளை சிவ ஸ்ரீ நர்த்தனாலயா நடனப்பள்ளி மாணவர்களின் கலாசார நிகழ்வு பதுளை நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் வடிவேல் சுரேஷ் கலந்துகொண்டதோடு, மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கிவைத்தார். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை இங்கு காணலாம்.



# வெங்காய சமோசா

**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 2கப்
எண்ணெய் - 1 தே.க
உப்பு - தேவையான அளவு
வெங்காயம் நறுக்கியது - 3 கப்
அவல் - 3 கப்
மிளகாய்த் தூள் - 2 தே.க
சீரகம் - 2 தே.க
பச்சை மிளகாய் - 2
கொத்தமல்லி - 1/2 கப்
எலுமிச்சை சாறு - 1/2 தே.க

**செய்முறை**

- கோதுமை மா, உப்பு, எண்ணெயை சேர்த்து தண்ணீர் விட்டு சப்பாத்தி மாவு போல் பிசைந்து 15நிமிடம் ஊறவிடவும்.
- ஒரு பாத்திரத்தில் வெங்காயம், அவல்,மிளகாய்த் தூள், சீரகப் பொடி, நறுக்கிய பச்சை மிளகாய், உப்பு, கொத்தமல்லி, எலுமிச்சை சாறு சேர்த்து பிசைந்து வைத்துக் கொள்ளவும்.
- சமோசா மாவை சாப்பாதி போல் மெல்லியதாக திரட்டி தோசை கல்லில் போட்டு ஒரு பக்கம் மட்டும் வேகவைக்கவும்.
- கொஞ்சம் கோதுமைமா எடுத்து சிறிது தண்ணீர்விட்டு பசைபோல் செய்து கொள்ளவும்.
- வேகவைத்த சப்பாத்தியை நீளவாக்கில் வெட்டவும். வெங்காய கலவையை நிரப்பி முக்கோண வடிவில் மடித்து பசையை தடவி ஒட்டிக்கொள்ள வேண்டும்.

ஒரு பாத்திரத்தில் எண்ணெயை விட்டு செய்து வைத்த சமோசாவை பொரித்து எடுத்தால் சுவையான வெங்காய சமோசா ரெடி.



# கிச்சன் டிப்ஸ்

* தயிரை நீர் இல்லாமல் வடிகட்டிவிட்டு, அத்துடன் தேவையான அளவு இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் சேர்த்து அரைக்கவும். இதில் உப்பு சேர்த்துக் கலந்து ரோஸ்ட் செய்த பாண் மீது தடவி சாப்பிடலாம்.

* இடியப்ப மாவுடன் சிறிது நெய் சேர்த்துப் பிசைந்துவிட்டுப் பிழியவும். வெந்த பிறகு இடியப்பம் மிக மென்மையாக இருக்கும்.

* அலுமினியப் பாத்திரத்தில் கொஞ்சம் ஆப்பிள் தோல்களைப் போட்டு, சிறிது நீர்விட்டு சில நிமிடங்கள் கொதிக்கவிடவும். பிறகு கழுவினால் அலுமினியப் பாத்திரம் பளிச்சென்றாகிவிடும்.

* சாம்பார், வற்றல் குழம்பு ஆகியவற்றில் காரம் அதிகமாகிவிட்டால் சிறிது நல்லெண்ணெயை பச்சையாக ஊற்றிக் கொதிக்கவிடவும். காரம் குறைந்துவிடும்.

* கட்லட் செய்யும் போது சிறிது கொத்தமல்லி இலைகளை நறுக்கிச் சேர்த்தால் சுவையுடன் மணம் கமகமக்கும்.

* பூரிக்கு மாவு பிசையும் போது அத்துடன் சிறிது நீரில் நனைத்த பாண் துண்டுகளை சேர்த்துப் பிசையவும். பூரி மொறுமொறுவென்று இருக்கும்.

# குழந்தை விரைவாக பேசணுமா?

குழந்தைகள் மழலை பேச்சில் மயங்கி இருக்கும் பெற்றோருக்கு இவர்கள் எப்போது பேசுவார்கள் என்ற எதிர்பார்ப்பு தினம் தினம் இருக்கும். சில குழந்தைகள் விரைவாக பேசி விடுவார்கள். ஆனால், சிலர் அந்த குறிப்பிட்ட காலத்தில் பேசு வதில்லை. இவர்கள் மற்ற குழந்தைகளை காட்டிலும் சிறிது நாட்கள் கழித்து தான் பேசுவார்கள். குழந்தைகள் உரிய வயதில் பேச வேண் டுமானால் இதை ட்ரைப் பண்ணிப்பாருங்கள்.

* உங்கள் குழந்தையை அனைவருடனும் பழக விட வேண்டும். இதுவே நீங்கள் பெருமளவில் முயற்சி செய்யாமல் அவர்களை பேச வைத்திட சிறந்த வழியாகும். மற்ற குழந்தைகளுடனும் விளையாட விடும் போது பேச்சு தானாக நிச்சயம் வரும்.

* எப்போதும் வேலை வேலை என்று இருந்தால் குழந்தைகளை பேச வைக்க வெகு நாட்களாகி விடும். குழந்தைகளுடன் பேசும் போது தான் அவர்களும் பேச கற்றுக் கொள்கின்றனர்.

* உங்கள் வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளின் பெயரையும் குறிப்பிட்டு பேசுவது நல்ல யோசனையாகும். அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா போன்ற அழைக்கும் சொற்களையும் எப்போதும் கூறி கொண்டு அவர்களையும் சொல்ல வையுங்கள்.

* ஒருவேளை உங்கள் குழந்தை இன்னும் பேசாமல் இருந்தால் இரவு நேரத்தில் படுக்கைக்கு செல்லும் போது கதைகளைப் படித்துக் காட்டுங்கள். இதுவும் உங்கள் குழந்தையின் பேச்சுத்திறனை வெளிப்படுத்தும் சிறந்த முயற்சியாக அமைகின்றது.

* ஆடு, மாடு, நாய் மற்றும் பறவைகள் ஆகியவற்றின் சத்தத்தை அவர்களுக்கு சொல்லிக் காட்டுங்கள். நல்ல சங்கீதம் மற்றும் குழந்தைகளுக்கான பாடல்களைக் கேட்க விடுங்கள். இதை அவர்கள் கேட்டு திரும்பச் சொல்லும் வரை பொறுமையுடன் காத்திருங்கள். அவர்கள் கேட்டதை ஒரு நாள் நிச்சயம் சொல்லுவார்கள்.

* வெறும் பேச்சு மட்டும் போதாது. அவர்களையும் திருப்பிச் சொல்ல சொல்லுங்கள். சிறிய வார்த்தைகளை சொல்லிக் கொண்டே இருங்கள். அது குழந்தையின் பெயராகவும் கூட இருக்கலாம். அந்த பெயரைக் கொண்டு இரவு நேர கதைகளில் ஏதேனும் ஒரு கதையை சொல்லலாம். இது அவர்களுக்கு நிச்சயம் புரியும். இதை எல்லாம் கேட்கும் குழந்தைகள் வெகு சீக்கிரம் பேசி விடுவார்கள்.





# தலை வலி...

## தப்பிப்பது எப்படி?

வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் வரட்டும் பார்த்துக்கலாம் என சொல்பவர்கள் கூட தலைவலி வந்தால் டென்ஷனாகி விடுகிறார்கள். டென்ஷன்தான் தலைவலிக்கு முக்கிய காரணம் என்றாலும், பலருக்குத் தலைவலிதான் டென்ஷனுக்கான காரணம். இது சாதாரணத் தலைவலிதானா, இல்லை மூளை தொடர்பான ஏதும் பாதிப்பா? எனப் பதற்றம் வந்துவிடும். வேலையில் கவனம் இன்மை, உடன் இருப்பவர்கள் தான் பழியாகுவார்கள் உள்ள தலை வலியை அவர்கள் மீது திட்டி தீர்த்துவிட வேண்டியதுதான். தலைவலியை வாழ்க் கையில் ஒரு முறையாவது அனுபவிக்காதவர்கள் இருக்க முடியாது. இப்படிப்பட்ட தலைவலி வந்தால்.....

- முதலில் எப்போது தலைவலி ஏற்படுகிறது, அடிக்கடி தலைவலி வருகிறதா என்பதைத் தெரிந்துகொண்டு, மருத்துவரின் ஆலோசனைகளைப் பெற்று மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- எல்லா மருந்துகளையும் ஒரே நாளில் தலைவலி என்றதும் குடிக்க கூடாது. அதே போல் தலைவலி குணமடைந்து விட்டதாக நீங்களே எண்ணி மருந்துகளை நிறுத்தி விடக் கூடாது. மருத்துவர் எத்தனை நாட்களுக்கு மருந்து கொடுத்தாரோ அதை முறையாகக் குடிக்க வேண்டும்.
- மைக்ரேன் தலைவலியால் அவதிப்படுபவர்கள் குளிர்பானங்கள், சிட்ரஸ் அமிலம் நிறைந்த உணவுகள், சொக்லேட், சீஸ், இட்லி, பாண், தோசை, மோனோ சோடியம் குளூட்டமேட் கலந்த சீன உணவுகள், ஃபாஸ்ட் ஃபுட், போதைவஸ்து போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
- தினமும் தேநீர் அருந்தினால் தலைவலி நிற்கிறது என்று, தினமும் குறிப்பிட்ட நேரத்தில் தேநீர் அருந்திக்கொண்டே இருப்பதும் தவறு. இது சுழற்சியாக மாறி, தேநீர் அருந்தாவிட்டால் தலைவலி ஏற்படும் சூழ்நிலையை உருவாக்கிவிடும்.
- சிறு வயதில் இருந்தே சரிவிகித உணவை உட்கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்வதையும், எட்டு மணி நேர முறையான தூக்கத்தையும் கடைப்பிடித்தால், தலைவலி வராமல் தடுக்க முடியும்.

**தலைவலிக்கு என்ன மாத்திரை எடுக்கவேண்டும்?**

எப்போதேனும் வரும் தலைவலிக்குப் பொதுவாக நிவாரண மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம். அடிக்கடி வரும் தலைவலிக்கு, குறிப்பிட்ட மாத்திரை சரியாகிவிடுகிறது என்றாலும், அதே மாத்திரையைத் தொடர்ந்து குடிக்கக் கூடாது. மருத்துவர் பரிந்துரையின்றி, சுயமாக மருந்துக்கடைகளில் மாத்திரை வாங்கிச் குடிப்பது நல்லதஅல்ல. இதனால், பல்வேறு பக்க விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.




திரைப்படம்:- பாகுபலி
பாடகர்கள்:- கார்த்திக், தாமினி
இசை: எம். எம். கீரவாணி
பாடலாசிரியர்:- மதன் கர்க்கி

பச்சைத் தீ நீயடா
பிச்சிப் பூ நானடா
ஒற்றை பார்வை கொண்டே
பற்றிக் கொண்டாயடா
வெற்றுக் கல் நானடா
வெட்டும் உளி நீயடா
அற்பப் பாறை என்னில்
சிற்பம் செய்தாயடா

நீயே மண் மின்னும் வெண் தாரகை
உள்ளங்கை சேர்ந்த பூங்காரிகை
கைகள் நாம் கோர்க்க சிறகாகுமே
புது வானங்கள் உருவாகுமே

பச்சைத் தீ நீயடா பிச்சிப் பூ நானடா
ஒற்றை பார்வை கொண்டே
பற்றிக் கொண்டாயடா

மான் விழிக்குள் எந்தன்
வாழ்வொன்றைக் காண
மாமலை ஒன்றேறி வந்தேனடி
இதயம் ஒன்று உள்ளதென்று உன்
அணைப்பாலே கண்டேனே
இன்னும் என்னை இறுக்கி
அணைத்திட துடித்தேனே

நீயே மண் மின்னும் வெண் தாரகை
தோளில் வீழ்கின்ற பூங்காரிகை
உந்தன் தோளோடு தோள் சேர்க்கிறேன்
என்னில் தோகைகள் நான் பார்க்கிறேன்


பச்சைத் தீ நீயடா பிச்சிப் பூ நானடா
ஒற்றை பார்வை கொண்டே
பற்றிக் கொண்டாயடா

கீறலில் உண்டாகும் கீதங்கள் கேட்டாய்
மோதலின் மோகங்கள் கேட்டாயடி

பிறவி பல எடுத்தாலும்
நிகழும் கணம் நான் மறவேனே
வலிகளே வரமென தந்திடக் கேட்டேனே

நீயே மண் மின்னும் வெண் தாரகை
கண்ணில் தேன் சிந்தும் பூங்காரிகை
உந்தன் நெஞ்சுக்குள் நான் நீந்தினேன்
காதல் ஆழத்தை நான் தாண்டினேன்

பச்சைத் தீ நீயடா பிச்சிப் பூ நானடா
ஒற்றை பார்வை கொண்டே பற்றிக்
கொண்டாயடா
வெற்றுக் கல் நானடா வெட்டும் உளி
நீயடா
அற்பப் பாறை என்னில் சிற்பம்
செய்தாயடா



## ஹிந்தி பட ரீமேக்கில் நடிக்கும் உதயநிதி

நடிகர் உதயநிதிஸ்டாலின் மான் கராத்தே படத்தை எடுத்த திருக்குமரன் இயக்கத்தில் கெத்து என்ற படத்தில் நடித்து வருகின்றார். கிட்டத்தட்ட இப்படத்தின் படப்பிடிப்பு முடியும் தருவாயில் உள்ளது. இதற்கு அடுத்து



அவர் என்றென்றும் புன்னகை படத்தை எடுத்த அஹ்மத் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.மேலும் இப்படம் 2013ம் ஆண்டு பாலிவுட்டில் வெளியான jollyLLb படத்தை தழுவி எடுக்கப் பட உள்ளது . இதில் சாதுரியமான வக்கீல் வேடத்தில் நடிக்க போகிறாராம் உதயநிதி.

## அதி நவீன பங்களா கட்டும் அஜித்

அஜித்குமார் அலுவலகத்திலும், வீட்டிலும் வாஸ்து நிரம்பி வழியும். பல வருடங்களாக திருவான்மியூர் வால்மீகி நகரில் வசித்து வந்த வீட்டை தரை மட்டமாக இடித்துவிட்ட ர்வர். அதே இடத்தில் அதி நவீன பங்களா கட்டுகிறார். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. சென்னையில் மம்முட்டி, ஜெயராம் ஆகியோரின் வீடுகள் மிகப் பிரமாதமாக இருக்கும். இப்போது தியாகராய நகரில் சூர்யா, கார்த்தியின் பிரமாண்ட பங்களா தயாராகி வருகிறது. விஜயின் நீலாங்கரை பங்களாவும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. விக்ரம், சிம்பு, சிவகார்த்திகேயன் போன்றோரின் பங்களாக்களும் வித்தியாசமாக இருக்கும். நடிகைகளில் ஊர்வசியின் வீட்டுக்கு நிகராக வேறு யாருடைய வீடும் இல்லை.



## ஓட்டுக்காக வரிந்து கட்டிய நடிகர்கள்!

இன்னும், இரு மாதத்திற்குள், நடிகர் சங்கத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்ட நிலையில், தலைவர் பதவிக்காக போட்டியிடும் சரத்குமார் மற்றும் விஷால் இருவரும் பெரிய அளவில் ஆதரவு திரட்டி வருகின்றனர். முக்கியமாக, கீழ்மட்டத்தில் உள்ள நடிகர்கள், நாடக கலைஞர்கள் என யாரேனும் உதவி கேட்டால், மேற்படி நடிகர்கள் போட்டி போட்டு, தேடிச்சென்று உதவி செய்து வருகின்றனர். அரசியல் தலைவர்கள் போன்று ஓட்டுக்காக அவர்கள் இப்படி வரிந்துகட்டி நிற்பதைப் பார்த்து, ஏனைய சினிமாக் கலைஞர்கள், கிண்டல் செய்கின்றனர்.

## கூகுளில் அதிகம் தேடப்படும் 2ஆவது பிரபலம் இவர் தான்!

தமிழ் சினிமாவில் டோனி, அழகு ராஜா படங்களில் நடித்தவர் ராதிகா ஆப்தே. இவர் திருமணமானவர் என்பது பலருக்கும் தெரியாத விஷயம் தான்.இந்தி, மராட்டிய படங்களில் நடித்துக்கொண்டிருந்த இவரின் நிர்வாணப் படங்கள் வெளிவந்து சர்ச்சையை கிளப்பியது. சமீபத்தில் சுஜாய் கோஷ் இயக்கிய அகல்யா குறும்படத்தின் மூலம் ராதிகா ஆப்தே இன்னும் பிரபலமாகிவிட்டார்.ஜூலை 22ஆம் திகதி நிலவரப்படி இந்தியாவில் இணையத்தில் அதிகம் தேடப்படும் நபர்களில் அப்துல்கலாமுக்கு அடுத்த படியாக இரண்டாம் இடத்தைப் பிடித்தார். மேலும், சூப்பர்ஸ்டாருக்கு ஜோடியாக நடிப்பது உறுதியாகியுள்ளதால் விரைவில் முதலிடத்தைப் பிடித்தாலும் ஆச்சரியமில்லை.



## சினி துளிகள்!

* வி.எஸ்.K.பி படத்தில், தனக்கு இணையான வேடத்தில், சந்தானம் நடிக்க அனுமதி கொடுத்துள்ளார் ஆர்யா.
* த்ரிஷா இல்லன்னா நயன்தாரா படத்தை அடுத்து, பாஷா என்கிற ஆண்டனி என்ற படத்தில் நடிக்கிறார் ஜி.வி.பிரகாஷ்குமார்.
* தனி ஒருவன் படத்தில், ஜெயம் ரவி மற்றும் நயன்தாரா. இருவரும் சண்டைக் காட்சியில் மோதியுள்ளனர்.
* காஞ்சனா - 2 படத்தில், அதிரடிப் பேயாக நடித்த டாப்சி, இனிமேல் சொப்ட்டான நடிகை என்ற பட்டியலில் இருந்து விடுபட்டு, அதிரடி நடிகையாக உருவெடுக்கப் போகிறார்.



## அப்ப

மறைந்த
தியாகராஜன் ந
மாட்டியான் ப
இயக்கத்தில் ம
உருவாக்கப்பட்
பிரஷாந்த் மம்ப
எஸ்.ஏ.சந்திரசே
இயக்கத்தில் வெ
சட்டம் ஒரு இரு
பட விரது
சி பிரிட்டே
இயக்கத்தில் அ
ரீமேக் செய்யப்ப
பாரதிராஜா இ
ரிலீசான சிகப்பு
ரோஜாக்கள் பட



## விஜயகாந்திற்கு என்னாச்சு?



சினிமாவில் ஹீரோ அரசியலில் கொமடியன் இதுதான் விஜயகாந்தின் தற்போதைய நிலை. கேப்டன் என்று கொண்டாடிய மீடியாக்களும் சமூக வலைதளங்களும் அவரை வைத்து செய்யாத கலாட்டாக்கள் இல்லை. அண்மையில் யோகா தின நிகழ்வில் பங்கேற்ற விஜயகாந்த் யோகா தவிர மற்ற சேட்டைகளையெல்லாம் செய்து மீடியாக்களில் வறுபட்டார். உண்மையில் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? அண்மையில் அவரைச் சந்தித்த ஊடகப் பிரமுகர் ஒருவர் சொன்னது

விஜயகாந்த் உண்மையாக பழைய தெம்புடன் இல்லை. அடிக்கடி ஆட்களையே மறந்து போய் விடுகிறார். பேசிக்கொண்டே இருப்பவர் சட்டென்று என்ன சொன்னேன் என்று கேட்கிறார். நடப்பதிலும், பேசுவதிலும் கூட ஒரு தடுமாற்றம் இருக்கிறது. ஆனால், அவரைச் சுற்றி உள்ளவர்கள் எல்லாவற்றையும் மூடி மறைக்கிறார்கள். விஜயகாந்தின் ஒரு கண்ணில் நீர் வழிந்தபடியே இருக்கிறது. நரசிம்மா பட சூட்டிங்கில் டம்மி பொம் வெடிச்சபோது ஒரு துகள் அவர் கண்ணில் பட்டதால் ஏற்பட்ட வருத்தம் தான் காரணம் என்கிறார்கள்.



## மணிரத்னம் படத்தில் கீர்த்தி சுரேஷ்!

ஓ காதல் கண்மணி படத்தை அடுத்து, பருத்திவீரன் கார்த்திக் நடிக்கும் படத்தை, இயக்குகிறார் மணிரத்னம். மேலும், இப்படத்தின் கதாநாயகி வேடத்தில் நடிக்க, நயன்தாரா மற்றும் ஸ்ருதிஹாசனிடம், "கால்ஷீட்" கேட்டார். அவர்கள் இருவரும் பல படங்களில் ஒப்பந்தமாகி, "பிசியாகி" நடித்து வருவதால், "கால்ஷீட்" இல்லை என்று கைவிரித்து விட்டனர். அதனால், வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவரான, மாஜி நடிகை மேனகாவின் மகள் கீர்த்தி சுரேஷை அழைத்து, "டிஸ்கஷன்" நடத்தியுள்ளார். தற்போது, ரஜினி முருகன், பாம்புசட்டை மற்றும் இது என்ன மாயம், பிரபுசாலமன் படம் என, ஒரே நேரத்தில் நான்கு படங்களில் நடித்து வரும் கீர்த்தி சுரேஷ், மணிரத்னம் படவாய்ப்பு என்றதும், கேட்ட திகதியில் "கால்ஷீட்" தருவதாக கூறியுள்ளார். அதனால், அவரை, ஓ.கே., செய்த மணிரத்னம், விரைவில் படப்பிடிப்பை தொடங்க தயாராகி வருகிறார்.



## பாடல்

படம்: சக்கரக்கட்டி
இசை: ஏ.ஆர்.ரஹ்மான்
பாடல்: வாலி
பாடியவர்: மதுஸ்ரீ

மருதாணி.. மருதாணி..
மருதாணி.. விழியில் ஏன்?
அடி போடி.. தீபாளி
கங்கை என்று கானலை காட்டும்... காதல்
கானல் என்று கங்கையை காட்டும்
வாழும் பயிருக்கு தண்ணீர் வேண்டும்
காதல் கதைக்கும் கண்ணீர் வேண்டும்
மருதாணி விழியில் ஏன்
அடி போடி தீபாளி
ஆகாயம் மண் மீது சாயாது
நிஜமான காதல் தான்
நிலையான பாடல் தான்
அதன் ஓசை என்னாளும் ஓயாது

மருதாணி.. மருதாணி.. விழியில் ஏன்

அவன் இதய வீட்டில் வாழும்
அவள் தேகம் வெந்து போகும்
என்னை அவன் மறந்திட மாட்டான்
சற்று நேரம் சற்று தூரம்
காதலி கை நகம் எல்லாம்
பொக்கிஷம் போலே அவன் சேமிப்பான்
ஒருத்திக்காக வாழ்கிற ஜாதி ஓ....
உணரவில்லை இன்னொரு பாதி

(மருதாணி விழியில்...)

அவள் அவன் காதல் நெஞ்சில்
கண்டாலே சிறு குற்றம்
அவன் நெஞ்சம் தாய்பால் போலே
என்னாளும் பரிசுத்தம்
ஆத்திரம் நேத்திரம் கூட
பாலையும் கல்லாய் அவள் பார்க்கிறாள்
ஆக மொத்தம் அவசரக் கோலம் ஓ....
அவளுக்கிதை காட்டிடும் காலம்...

மருதாணி.. மருதாணி..
மருதாணி.. விழியில் ஏன்
அடி போடி.. தீபாளி
கங்கை என்று கானலை காட்டும்... காதல்
கானல் என்று கங்கையை காட்டும்
வாழும் பயிருக்கு தண்ணீர் வேண்டும்
காதல் கதைக்கும் கண்ணீர் வேண்டும்
மருதாணி விழியில் ஏன்
அடி போடி தீபாளி
ஆகாயம் மண் மீது சாயாது
நிஜமான காதல் தான்
நிலையான பாடல் தான்
அதன் ஓசை என்னாளும் ஓயாது

மருதாணி... மருதாணி... விழியில் ஏன்
மருதாணி.... மருதாணி....
மருதாணி.... விழியில் ஏன்

## பாகுபலியை மிஞ்சும் எந்திரன் - 2

தற்போது, மெட்ராஸ் பட இயக்குநர், ரஞ்சித் இயக்கும், காளி படத்தில் நடிக்கிறார் ரஜினி. இப்படத்துக்காக முன்பு, காளி படத்தில் நடித்தது போன்று, இப்படத்திலும், தான் நடிக்கும், "டான்" வேடத்திற்கேற்ப, தன் கெட்டப்பை பக்காவாக மாற்றி நடிக்கிறார். இந்த ஆண்டுக்குள், இப்படத்தை முடித்து விடும் ரஜினி, 2016இல் ஷங்கர் இயக்கும் எந்திரன்-2வில் நடிக்கிறார். அப்படத்தை, பாகுபலியை விட பிரமாண்டமாக தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஷங்கர், ஓரிரு பிரபல பொலிவுட் நடிகர்களையாவது படத்தில் நடிக்க வைத்து விட வேண்டும் என்று மெனக்கெட்டு வருகிறார்.




## ...ப்பாக்களின் படங்கள் மகன்களுக்கு!

...றைந்த ராஜசேகர் இயக்கத்தில் ...ராஜன் நடித்த மலையூர் ...யான் படத்தின் ரீமேக் தியாகராஜன் ...த்தில் மம்பட்டியான் என்ற பெயரில் ...க்கப்பட்டது. இதில் அவரது மகன் ...த் மம்பட்டியானாக நடித்தார். ...சந்திரசேகரன் ...த்தில் வெளியான ...ரு இருட்டறை ...வரது பே... ...பிரிட்டோ ...த்தில் அதே பெயரில் ...சய்யப்பட்டது. ...ஜா இயக்கத்தில் ... சிகப்பு ...கள் படத்தை ரீமேக் செய்து அதே பெயரில் 2ஆம் பாகமாக அவரது மகன் மனோஜ் கே.பாரதி இயக்கத் திட்டமிட்டுள்ளார். மணிவண்ணன் இயக்கத்தில் வெளியான நூறாவது நாள் படத்தை ரீமேக் செய்து அதே பெயரில் 2ஆம் பாகமாக அவரது மகன் ரகு மணிவண்ணன் இயக்குகிறார்.





# யார் நீ?

இரவில் மாறு வேடத்தில் தலைநகரத் தெருக்களில் உலவுவது மன்னர் நெடுஞ்செழியனுக்கு வழக்கம். அதுபோல் ஒருநாள் மாறுவேடத்தில் உலவும் போது, தன் ஒற்றர் தலைவன் சத்துருக்கனன் பகைவர்களின் நாட்டுப் போர் வீரன் ஒருவனுடன், ஒரு பாழடைந்த கோயிலில் உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு சினந்தார். தன்னுடைய உப்பைத் தின்று வாழும் ஒருவன் தன் நாட்டிற்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய துரோகச் செயலில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு, உருவிய வாளுடன் அவர்கள் மீது பாய்ந்தார்.

உடனே பகைவன் தப்பித்து ஓடிவிட, ஒற்றர் தலைவன் சத்துருக்கனன் தன்னைத் தாக்க வருவது மாறுவேடத்திலுள்ள தனது மன்னர்தான் என்று அறியாமல், தன் வாளை உருவிக் கொண்டு அவருடன் சண்டையிட முற்பட்டான். இதைக் கண்டு ஓடி வந்த சிலர், சத்ருக்கனனுக்குத் துணையாக மன்னருடன் சண்டையிடத் தொடங்க, பலமுனைத் தாக்குதலை சமாளிக்க முடியாமல் மன்னருடைய வாள் கை நழுவி விழுந்தது.

மிகுந்த கோபத்திலிருந்த சத்ருக்கனன், மன்னருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு முட்டாளே! காரியத்தைக் கெடுத்து விட்டாயே! பகைவர்களுடைய வீரனை தந்திரமாகப் பேசி இங்கு வரவழைத்து, அவர்களைப் பற்றிய ரகசியங்களை அறியத் திட்டமிட்டிருந்தேன். விஷயம் அறியாமல் நீ குறுக்கிட்டதால் அவன் ஓடி விட்டான். உன்னுடைய அறிவற்ற செயலால் நல்லதொரு வாய்ப்பினை இழந்தோம். மூடனே! யார் நீ? என்று வசை பாடினான்.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு

**விளக்கம்: தன்னிடமுள்ள குறையை நீக்கிக் கொண்டு அதன் பின்னர் பிறர் குற்றத்தை நோக்கும் தலைவனுக்குக் குறையேதும் ஏற்படாது.**



# ஆந்தையின் சுவாரஸ்யம்

ஆந்தை, ஸ்ட்றைஜிபோர்மெஸ் இனத்தைச் சார்ந்த பறவை. இது பெரும்பாலும் தனித்தே காணப்படும். ஆந்தை இனத்தில் மொத்தம் 133 வகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் (Barn Owls) ஆந்தைகள். ஆந்தைகள் முன்நோக்கும் பெரிய கண்களையும், காதுகளையும், அலகையும் கொண்டவை. இதனால் பார்க்கும் திசையை மாற்றுவதற்கு முழுத்தலையையும் திருப்பவேண்டியுள்ளது. இது தனது தலையை இரு திசைகளிலும் 270 பாகைகள் வரை திருப்பவல்லது.

ஆந்தைகள் தூரப்பார்வை கொண்டவை. அவற்றின் கண்களுக்கு சில அங்குலம் தூரத்திலுள்ளவற்றை கூட தெளிவாகப் பார்க்க முடியாதவை. எனினும், அவற்றின் பார்வை, மங்கலான வெளிச்சத்தில் மிகவும் சிறப்பானது. பல ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியைப் பின்தொடர்ந்து வேட்டையாடக் கூடியவை.

இவை காடுகள், பாலைவனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்களில் மரங்களின்மேல் அல்லது நிலத்தின்கீழ் உள்ள வளைகள், குகைகள், பாழடைந்த கட்டிடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின்றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து 6 இன்ச்சிலிருந்து 28 இன்ச் வரையும், 1 கிலோ முதல் 4 கிலோ எடை வரையும் உள்ளன. பெண் ஆந்தைகள் ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையானவை. எனவே, இவை பறக்கும்போது சத்தம் கேட்பது இல்லை.

ஆந்தை முட்டைகள் கிட்டத்தட்ட கோளவடிவம் கொண்டவை. ஆந்தைகள் அவற்றின் வகையைப் பொறுத்து பன்னிரெண்டு வரையிலான முட்டைகளை இடுகின்றன. பாறைகளின் விளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயோ முட்டையிடும். இவை அடைகாக்கும் 15 முதல் 35 நாட்களில் குஞ்சுகள் பொரிக்க ஆரம்பிக்கின்றது.



இந்த படத்தை பார்த்து இதில் எத்தனை புலிகள் உள்ளது எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்....

## பொது அறிவு

*சிலந்திகள் ஒரு வார காலம் வரை உணவு இல்லாமல் வாழ்கின்றன.

* மண்புழுவிற்கு 5 ஜோடி இதயங்கள் உள்ளன.

* மண்புழு தோல் மூலம் சுவாசிக்கும்.

* தேனீயால் பச்சை, நீலம், ஊதா நிறங்களை பிரித்தறிய முடியும்.

* பூச்சி இனங்களில் தும்பியின் கண்கள் கூர்மையானவை.

* பட்டாம் பூச்சிக்கு நுரையீரல் இல்லை. அதன் வயிற்றுப் பகுதியில் உள்ள ''ஸ்பிராக்கிள்'' என்னும் துளைகள் வழியாக சுவாசிக்கின்றன.

1. ராகத்துடன் பாடி வருவார், ராத்தூக்கம் கெடுப்பார். அவர் யார்?

2. காவி உடை அணியாத முனிவர். கரை ஓரம் ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். அவர் யார்?


3. கருப்பு நிறத்துக்குச் சொந்தக்காரன், கலகல பேச்சுக்காரன், ஒருவருக்குத் துயர் என்றால் ஊரையே அழைப்பான்.அவன் யார்?

4. பறக்கும் இது பறவை இல்லை. ஆனால் இது அடையாளம் காட்டிக் கொடுத்து விடும். அது என்ன?

5. முதுகில் சுமை தூக்கி முணங்காமல் வருவான்.மூச்சும் திணறாது.முகமும் கோணாது. அவன் யார்?




## வழி கண்டுபிடிப்போம்





இப்பகுதிக்கான விடை 28 ஆம் பக்கம் பார்க்க.




★ கட்டமிடப்பட்ட அடைப்பிற்குள் தரப்பட்ட எண்ணிற்குப் பதிலாக இடக்கூடிய பெறுமானத்தைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.


01) 12 [+ 18] + 2 = 32
1) 10 - 10  2) 10 + 10  3) 10 ÷ 6

02) தரப்பட்ட உருக்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. ஒன்று முற்றிலும் வேறுபட்டது அவ்வுருவின் கீழ்க் கோடிடுக.

1) 2) 3)



03) 123, 244, 365 ..... என்னும் தொடரில் அடுத்து வரும் எண் யாது?
1) 486  2) 437  4) 456

04) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண் குறி யாது?




1) 30  2) 6  3) 40

05) பின்வரும் உருக்களில் வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

1) 2) 3) 4)


06) அருகிலுள்ள உருவில் மறைந்திருக்கும் எண் யாது?

1) 10  2) 100  3) 1000

07) பின்வரும் விபரத்தை வாசித்துச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


1Kg சீனி = ரூபா 50

1Kg சீனி + 1Kg பருப்பு = 80.00 எனின்

1.5Kg பருப்பின் விலை யாது?
1) 100.00  2) 30.00  3). 45.00

08) ரவி ஒருதொகைப்பணம் வைத்திருந்தான். அதன் பணத்தின் 3 மடங்கைக் கண்ணன் வைத்திருந்தான். கண்ணன் வைத்திருந்த பணம் ரூபா 360 எனின், ரவியிடம் உள்ள பணம் யாது?
1) 180.00  2) 12.00  3) 120.00

09) கோலத்துக்கு ஏற்ப அடுத்து வரும் உரு யாது?



1) 2) 3)

10) இடைவெளியில் இருக்கவேண்டிய விடையின் கீழ்க் கோடிடுக.

A1B, B2C, .............. , D4E
1) C4E  2) C3D  3) C5F


★ 11ஆம், 12 ஆம் வினாக்களுக்குக் கீழ்வரும் தரவைக் கொண்டு விடை தருக.

A, B ஆகிய இரு பகுதிகளும் ஒரே மாதிரி எனின் R எனவும் பிழை ஆயின் W எனவும் இடுக.

| | A | B | |
|---|---|---|---|
| 11) | கதநறர | கநதறர | (...........) |
| 12) | △▽○□ | ▽△○□ | (...........) |


13) ஒரு புகையிரதம் 45 ஆவது Km கல்லிலிருந்து 50 ஆவது Km கல்லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதியில் சென்றால் 80 ஆவது Km கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் எடுக்கும்?
1) 80 நிமிடம்  2) 50 நிமிடம்  3) 30 நிமிடம்

14) நாடு, மாகாணம், மாவட்டம் என்பவற்றைக் காட்டும் சரியான வரிப்படம் எது?

1) 2) 3)


15) 100இன் 1/4 வாசியுடன் 7 ஐக் கூட்டி 4 ஐக் கழிக்கும் போது கிடைக்கும் விடை யாது?
1) 25  2) 28  3) 75

★ 16ஆம், 17 ஆம் வினாக்களுக்குக் கீழ்வரும் தரவைக் கொண்டு விடை தருக.





எனவும் தரப்பட்டுள்ளது.

16)  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
1) 16  2) 44  3) 32

17)  = ?

இக் கணிதச் செயற்பாட்டிற்குப் பெறுமானம் யாது?
1) 14  2) 02  3) 04

18) ஒரு பஸ் வண்டியில் 80 பயணிகள் அமர்ந்தும் நின்றும் பயணம் செய்தனர். இடை நடுவில் அரைவாசிப்பேர் இறங்கினர். மீதியாக 25 பேர் அமர்ந்தனர் எனின், நின்று பயணம் செய்தவர்கள் எத்தனை பேர்?
1) 15  2) 80  3) 25

19) இக்கடிகாரத்தினைத் தளவாடியில் பார்க்கும் போது காட்டும் நேரம் யாது?

1) 7 மணி 10 நிமிடம்

2) 5 மணி 55 நிமிடம்
3) 2 மணி 30 நிமிடம்


★ கீழே தரப்பட்ட இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை அவதானித்து 20ஆம், 21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| 43MP258JPIM4M62RKM3PR78R |
|---|

21)இங்கு அதிகளவில் காணப்படும் ஆங்கில எழுத்து யாது?
1) P 2) M 3) R


22)இங்கு ஒரு இலக்கத்துக்கு முன்னும் பின்னும் ஒரே ஆங்கில எழுத்து உள்ளது. அந்த எழுத்து எது?
1) M 2) R 3) P

23)செவ்வகத்தின் சுற்றளவு 32 Cm எனின், வட்டத்தின் ஆரை யாது?




1) 5cm 2) 3cm
3) 6cm

24)தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது?




1) 8 Cm
2) 9 Cm
3) 14 Cm

25)அடைப்பினுள் தரப்பட்ட எழுத்துக்களில் நான்கு எழுத்துக்களை ஒழுங்குபடுத்திப் போக்குவரத்துச் சாதனம் ஒன்றின் பெயரைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.(...........................)

| க வி ப் ஸ் ம் கு<br>மா ப கா ன த<br>ட |
|---|


1) விமானம் 2) கானகம் 3) படகு

26)



என்ற இரகசியக் குறியீடு குறிக்கும் சொல் யாது?
1) பருவம் 2) கடிதம் 3) வடிவம்

27)புள்ளிக்கோடிட்ட இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.





1) 4
2) 5
3) 6

28)சிலர் வறுமை அடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்பதைக் குறிக்கும் பழமொழியின் கீழ்க் கோடிடுக.
1) கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
2) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
3) கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

29)பாடசாலை ஒன்றில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வரும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர் மன்றம் நடைபெறும். நேற்று 9 ஆம் திகதி மாணவர் மன்றம் இடம்பெற்றது எனின், அடுத்த மன்றம் எப்போது இடம்பெறும்?
1) 24 ஆம் திகதி
2) 23 ஆம் திகதி
3) 26 ஆம் திகதி

30)கபிலனின் வயது 10. அசோக் கபிலனிலும் 3 வயது கூடியவன். நிசார் அசோக்கிலும் 4 வயது குறைந்தவன் எனின், 5 வருடங்களின் பின் நிசாரின் வயது யாது?
1) 9 2) 16 3) 14

31)இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் பின்னமாக அமைவது எது?




1) $\frac{1}{2}$ 2) $\frac{1}{4}$ 3) $\frac{1}{8}$

32)கணிதப் புத்தகத்தை விரிக்கும் போது இடது கைப்பக்கம் 104 ஆக இருந்தது. அடுத்த பக்கத்தை விரிக்கும் போது வலது கைப்பக்கம் இருக்கும் பக்க எண் யாது?
1) 105 2) 106 3) 107

33)முதலாம் எழுத்து கண்ணில் உண்டு காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து தினத்தில் உண்டு செவ்வாயில் இல்லை. அது என்ன?
1) பத்து 2) கத்தி 3) கயிறு

34)கீழுள்ள உருக்களில் 2/5 பங்கைச் சரியாக நிறந் தீட்டக் கூடிய உருவின் கீழ்க் கோடிடுக.




35)எழுத்துப் பிழையுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
1) தேநீர் குடித்தேன்
2) கண்ணன் சிணம் அடைந்தான்
3) மழை நன்றாகப் பெய்தது

36)பாடசாலையில் அதிகமாகக் காணப்படவேண்டிய ஒன்றாக அமைவது எது?
1) ஆசிரியர்கள் 2) மாணவர்கள் 3) வெண்கட்டி

37)தோட்டமொன்றிலுள்ள தாவரம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு அமைகின்றன.

★ ஆணிவேரைக் கொண்டவை - 18
★ ஆணி வேர் இல்லாதவை - 30
★ சோளப்பயிர் - 10
★ மாமரம் - 15

இத்தகவலின் படி தோட்டத்திலுள்ள மொத்தத் தாவரங்கள் எத்தனை?
1) 40 2) 48 3) 73


★ பின்வரும் எழுத்துக்களையும் இலக்கங்களையும் கொண்ட தகவல்களை நன்கு வாசிக்கவும்.

| 123456789<br>அ க த ம ன சு |
|---|

38)தமிழில் உள்ள உயிர் எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.

39)இங்கு காணப்படும் மிகப் பெரிய ஒற்றை எண்ணையும் க எழுத்தையும் ஒரு கோட்டினால் இணைக்கவும்.

40)இங்குள்ள இலைகளின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் காட்டினால் விடையாக அமைவது எது?



1) vi 2) iv 3) viii

01) தரப்பட்டுள்ள பாடலை நன்கு வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையை எழுதுக.

வண்ண வண்ணக் குடைகள்
வாகாய் அமைந்த குடைகள்
நிழலைத் தரும் குடைகள்
நிமிர்ந்து விரிந்த குடைகள்

சிறுவர் விரும்பும் குடைகள்
சின்னஞ்சிறிய குடைகள்
பெரியோர் விரும்பும் குடைகள்
பெறுமதி மிக்க குடைகள்

1. இப்பாடலில் அதிகதடவை வரும் சொல் யாது?
..........................................................
2. வண்ணம் என்பதன் ஒத்தசொல் என்ன?
..........................................................
3. இங்கு காணப்படும் அடுக்கிடுக்குத் தொடர் யாது?
..........................................................
4. பாடலில் உள்ள பெயரெச்சம் யாது?
..........................................................
5. உயர்திணை, படர்க்கை, பலர்பால் சொல் எது?
..........................................................
6. இங்கு விபரிக்கப்படும் பொருள் மனிதனின் எத்தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றது?
..........................................................
7. பெரியோர் என்பதன் எதிர்க்கருத்து சொல் எது?
..........................................................
8. அடுக்குத்தொடர் ஒன்றை எழுதுக?
..........................................................
9. வாகாய் என்பதனால் கருதப்படுவது யாது?
..........................................................
10. விரிந்த என்பதன் நிகழ்கால வடிவம் யாது?
..........................................................

02) அடைப்புக் குறிக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

1. கிணற்றில் தண்ணீர் இறைக்க ........ க் கொண்டே இருந்தது.(ஊறி, ஊரி)
2. அழகிய பறவை கிளி என்பது போல் அச்சத்தால் வருவது .................. (கிலி, கிழி)

03) கண்ணன் தனது நண்பன் விழுந்த போது தோள் கொடுத்தான். இங்கு தோள் கொடுத்தல் என்பதன் பொருள் ..........................

04) எனது பாட்டி " சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது" என அடிக்கடி கூறுவார். இங்கு கூறப்பட்டிருக்கும் பழமொழி யாது?

05) பின்வரும் சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளினை எழுதுக

1. வெ.நோ.பி - ..........................................
2. பா.அ.ச. - ..........................................

06) மயிலிற்கு போத்து போல குதிரைக்கு ..........................................

07) எருமை முக்கார மிடுவது போல தேனீ ..........................................

08) அருகிலுள்ள குறியீடு உணர்த்தும் பொருள் யாது? SLS
..........................................................

09) 80ஆவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா யாது?
..........................................................

10) தமிழ் சொல்லிற்குப் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக

1. கடற்கரை - ..........................................
2. செய்தி - ..........................................

11) ஆங்கிலப் பதத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. I am Hungry - ..........................................
2. Please go out - ..........................................

12) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. கிரவா கொள பாட்ட
..........................................................
2. மல்லி மெகி என்ன
..........................................................

13) சிறுவர்களுக்கு துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் யாது?
1. 119 2. 1919 3. 101

14) எமது வீட்டிற்கு நேரடியாக வழங்கும் சேவை அல்லாதது எது?
1. அஞ்சல் சேவை 2. மருத்துவ சேவை 3. மின்சார சேவை

15) பழங்களின் புளிப்புச்சுவைக்குக் காரணமாக அமையும் இரசாயனப் பதார்த்தம் எது?
1. வினாகிரி 2. அஸ்கோபிக்கமிலம் 3. பழப்புளி

16) தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்கும் நிறம் யாது?
1. கபிலம் 2. நீலம் 3. கறுப்பு

17) கணினி யுகத்தில் சூறாவளி அபாயத்தை அறிய உதவும் கருவி
1. செய்மதிப்படங்கள் 2. ரேடார்கருவி 3. வான்பொருள்

18) தையல் ஊசிகளைத் துருப்பிடிக்காமல் பாதுகாக்க உதவும் பொருள் யாது?
1. மண்ணெண்ணெய் 2. முகப்பவுடர் 3. மண்

19) துடுப்பாட்டப் போட்டியில் (Wibe ball) அகலப்பந்து என்பதற்கு மத்தியஸ்தர் காட்டும் சைகை என்ன?
1. இரண்டு கைகளையும் பக்கத்துக்கு நீட்டுதல்
2. ஒரு கையை பக்கத்திற்கு நீட்டுதல்
3. ஒரு கையை மேலே உயர்த்துதல்

20) மாணிக்ககங்கைக்கு அருகில் உள்ள புனித தலம்
1. முன்னேச்சரம் 2. கதிர்காமம் 3. கோணேச்சரம்

21) இலங்கையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் இரண்டாவது சர்வ தேச விமான நிலையம் அமைந்துள்ள இடம் எது?
1. கம்பளை 2. அம்பாந்தோட்டை 3. கொழும்பு

22) புத்துயிர் மூலம் மீண்டும் வால் முளைக்கும் பிராணி
1. அறணை 2. ஆமடில்லா 3. பச்சோந்தி

23) உலகிலே காற்றலை மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் நாடு
1. அமெரிக்கா 2. ஜப்பான் 3. கனடா

24) SLDA இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும் பொருள்
1. பற்பசை 2. பால்மா 3. தீப்பெட்டி

25) பண்டைய காலத்தில் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்க பயன்படுத்துவது
1. சக்கரம் 2. செக்கு 3. உலோகம்

26) வனை சில்லு பயன்படுத்தப்படும் தொழில்
1. நெசவு 2. உலோகத்தொழில்
3. மண்பாண்டத் தொழில்

27) "அத்தை அடித்தாளோ........"
இப்பாடலின் மூலம் குறிக்கப்படும் நிகழ்வு
1. உழவு 2. தாலாட்டு 3. கோலாட்டம்

28) வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களைச் சேதமாக்கும் நத்தைகளைப் பிடித்துண்ணும் பிராணி
1. செண்பகம் 2. பாம்பு 3. தவளை

29) கோழிகள் முட்டைகளை அடை காத்து குஞ்சு பொரிக்கும் காலம் எவ்வளவு
1. 21நாள் 2. 28நாள் 3. 35நாள்

30) எதிரிகள் துரத்தும் போது உடலை திரளையாக்கி பந்து வடிவில் காணப்படும் பிராணி
1. ஆமடில்லா 2. மரவட்டை 3. எறும்புண்ணி

31) சக்கரைச்சாதத்தைத் தயாரிக்கும் போது பயன்படுத்தும் வித்து
1. பாசிப்பயறு 2. ஆசனிப்பலா 3. கௌப்பி

32) அனேக அழகுசாதப் பொருட்களில் அதிகளவில் சேர்க்கப்படும் மூலி

கைத் தாவரம்
1. மரமஞ்சள் 2. வேம்பு 3. கற்றாளை

33) மின்னேரியாவின் தெய்வம் எனும் அடைமொழியுடன் அழைக்கப்படும் மன்னன்
1. முதலாம் அக்ரபோதி 2.மகாசேனன்
3. தாதுசேனன்

34) நீரின் மேற்பரப்பில் மிதக்கும் தாவரம்
1. ஆகாயத்தாமரை 2. தேங்காய் 3.பாக்கு

35) போதி மரம் என அழைக்கப்படும் மரம்
1.வெள்ளரசு 2. நாகமரம் 3. வேப்பமரம்

36) உலர் மின் கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு 3 கம்பித்துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காட்டுக.




37) நீண்ட ஆயுள் தரக்கூடிய பொருள் எது
1.நெல்லிக்காய் 2. கண்டங்காய் 3. அப்பிள்

38) உயரமாக வளரும் புல் வகை எது
1. மூங்கில் 2. கோரை 3. அறுகு

39) அருகிலுள்ள பொருளைப் பயன்படுத்துபவர்
1. தச்சுவேலை செய்வோர்
2. மீன்பிடிப்போர் 3. விவசாயி





40) இதில் உள்ள எந்தப் பொருள் காந்தத்தால் கவரப்படும்





41) இலங்கையில் நெல் தன்னிறைவு அடைந்தது யாருடைய ஆட்சிக்காலத்தில் ஆகும்
1. மகாபராக்கிரமபாகு 2. தாதுசேனன் 3. மகாசேனன்


42) அலங்காரத்திற்குப் பயன்படும் தையல் வகை.



43) ஒரு நேர்கோட்டில்  என்னும் வடிவங்கள் ஒழுங்காக வரிசையில் அடுக்கப்பட்டுள்ளன. இதில் 72 ஆவதாகக் காணப்படும் உரு எது?


44) ஒரு பால் பைக்கற்றின் நிறை ஒரு தேயிலைப் பைக்கற்றின் 4.5 மடங்காகும். தேயிலைப் பைக்கற்றின் நிறை 2Kg 250g எனில், ஒரு பால்மா பைக்கற்றின் நிறை எவ்வளவு?.........................................

45) 
உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பெரிய செவ்வகம் ஒன்றினுள் சிறிய செவ்வகம் வரையப்பட்டுள்ளது. ஒரு சிறிய செவ்வகத்தின் பரப்பு 2 $Cm^2$ எனின், செவ்வகத்தின் பரப்பளவு எவ்வளவு? ..................................


46) 

படத்தில் காட்டப்படும் ஆங்கில எழுத்துக்களின் தளங்கள் பெயர்களை எழுதுக.

47) விரித்து வைக்கப்பட்டுள்ள ஓர் புத்தகத்தின் தோற்றத்தைப் படத்தில் காணலாம். அடுத்த பக்கத்தை விரிக்கும் போது வரும் இடது பக்க எண் யாது?
.........................................




48) ஒரு மோட்டார் சைக்கிள் சென்ற தூரம் மானியில் பின்வருமாறு குறிக்கப்படுகிறது.





மேலும் 1 Km சென்ற பின்னர் மானியில் காட்டப்படும் இலக்கம் யாது?




49) எதிரே உள்ள வரிப்படம் நூலகம் ஒன்றிலுள்ள புத்தகங்களின் தொகையைக் காட்டுகின்றது.
1. கணித புத்தகம் நூலகத்தில் உள்ள மொத்தப் புத்தகங்களின் என்ன பின்னம்.
2. ஆங்கிலப் பாடநூலுக்குச் சமனான வேறு புத்தகம் எது?
.........................................




50)
1. இவ் உருவை மடித்து ஒட்டும் போது பெறப்படும் திண்ம வடிவம் யாது?
.........................................
2. இத்திண்மத்தில் காணப்படும் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
.........................................




| பைக்கற்று | அரிசி | சீனி | மா | விசுக்கோத்து | கிழங்கு | பூடு |
|---|---|---|---|---|---|---|
| பைக்கற்றின் நிறை | 10Kg | 5Kg | 2Kg | 200g | 1Kg | 250g |

1. 1Kg இலும் கூடிய 10Kg இலும் குறைந்த நிறையுள்ள பைக்கற்றுக்கள் எவை?.........................................
2. 10Kg அரிசிப் பொதியில் எத்தனை 200g அரிசிப் பொதிகள் கட்டலாம்?.........................................

50) பெருக்கல் * என்னும் குறியீட்டினாலும் வகுத்தல் ◎ என்னும் குறியீட்டினாலும் காட்டப்பட்டுள்ளன. இதன் பெறுமதி யாது?
18 * 2 ◎ 4 .....................

53) எதிரே காட்டப்பட்டுள்ள காணியைச்சுற்றிவரத் தூண்கள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் 6 தூண்கள் இருப்பின் காணியைச் சுற்றிவர எத்தனை தூண்கள் காணப்படும்.
.........................................



54) போட்டி ஒன்றின் போது வெற்றி பெறுவதற்குச் சேகரிக்கப்பட வேண்டிய மேலுறையின் எண்ணிக்கை 1000 ஆகும். 872 மேலுறைகளை வைத்திருக்கும் ஒரு மாணவன் வெற்றி பெறுவதற்கு இன்னும் எத்தனை மேலுறைகளைச் சேர்க்க வேண்டும்.
.........................................

55) ஒரு புகையிரதத்தில் 1326 பயணிகள் உள்ளனர். அடுத்த புகையிரத நிலையத்தில் 785 பேர் இறங்கி 50 பேர் ஏறினர். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை பேர்?
.........................................

56) றமணன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சிறிது தூரம் சென்றபின் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்பு மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்று இறுதியில் இடது கைப்பக்கம் திரும்பினான். இப்போது றமணன் எத்திசைநோக்கி நிற்கின்றான்?
.........................................

57) பாலனின் வயது தேவனின் வயதை விட 3 கூடுதல் ஆகும். தேவனின் வயது மோகனின் வயதைவிட 4 குறைவாகும். மோகனின் வயது 15 ஆயின் பாலனின் வயது எவ்வளவு?
.........................................

58) பின்வரும் உரைப்பகுதியினை வாசித்து மீதிப் பகுதியைப் பூரணப்படுத்துக. உமது கருத்துக்களை ஆறு வாக்கியங்களுக்கு மட்டுப்படுத்துக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெறவேண்டும். அவ் வாக்கியங்களின் எழுவாய் பயனிலை தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்.

அங்கும் இங்கும் இருட்டிக்கொண்டு வந்தது. வீட்டில் யாரும் இல்லாததால் நான் கதவை மூடி விட்டு வீட்டினுள் இருந்து படிக்கத் தொடங்கினேன். சிறிது நேரம் தான் சென்றிருக்கும் திடீரென்று மின் விளக்குகள் அணைந்து போயின.

1). .........................................
2). .........................................
3). .........................................
4). .........................................
5). .........................................
6). .........................................

நம்நாட்டில் என்ன ஸ்பெஷல் 15

# ஆமையுடன் ஒரு செல்பி

# ஹிக்கடுவ பீச்

கடற்கரையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அலைகள் அல்லாமல் தெளிவான தண்ணீரில் விளையாட யாருக்குத்தான் ஆசை இருக்காது? அதுவும் குடும்பத்தோடு ஒரு நாள் முழுவதையும் கடலில் அழகாகப் களிப்பதோடு இலங்கைக்கே உரித்தான ஆமை இனங்களை விளையாடி செல்பி கூட எடுக்கலாம் என்றால் யார் தான் விரும்பமாட்டார்கள்.

காலி நகரில் இருந்து 19.4 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது ஹிக்கடுவை கடற்கரை. இந்த இடம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் அமோக வரவேற்பைப்பெற்ற இடமாகும்.

கடற்கரை என்றால் வழமை போன்றது தானே என எண்ணி விட முடியாது. இலங்கையைச் சுற்றி அமைந்துள்ள கண்டமேடையின் வேறுபட்ட தன்மையினால் அதன் கடலோர அம்சங்களும் வேறுபடுகின்றன. ஏனைய பிரதேசங்களைப் போலன்றி தென்பகுதிக் கடற்பரப்பை வீதியால் பயணிக்கும் பொழுதே இந்த வித்தியாச அழகை இரசிக்க முடியும். தென்னந்தோப்புகளின் ஊடாக சில்லென வீசும் காற்றில் மெல்ல அசைந்து வரும் அலைகள் நீல வண்ணக் கடலின் குளிர்ச்சியான அழகையும் கண்களால் கவரும் வண்ணம் இருப்பதுடன். பார்ப்பவர்களைச் சொர்க்க பூமி இதோ என்று சொல்லும் அளவுக்கு அழகிய கடற்கரை இது.


ஆழம் குறைவாக இருப்பதால் ஆபத்தில்லாத தெளிந்த நீரில் விளையாடி மகிழ முடியும். மேலும். இப்பிரதேசம் பவளப்பாறைகளுக்குப் பிரசித்தமாவதற்கும் இந்தக் கண்டமேடை அமைப்பே காரணமாகின்றது. கடற்கரையை வெண்மணல் போர்த்தி நிற்கக் கரையிலிருந்து சிறு தொலைவில் சிறிய பாறைக்குன்றுகள் இயற்கையின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. ஹிக்கடுவை கடற்கரையை பார்வையிடுவதோடு இதனை அண்டி உள்ள விகாரைக்கும் சென்று வர முடியும்.

***சீனிகம தெவொல் மகா விகாரை***

300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இவ் ஆலயம் கடலின் மத்தியில் அமைந்துள்ளது. இங்கு செல்ல வல்லங்களின் உதவியை நாட வேண்டியிருக்கும். அது சுற்றுலாத் துறையினருக்கு புது அனுபவத்தை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

எனினும் பக்தர்களின் வசதிக்காக அழகிய பொன் மஞ்சள் வர்ணத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய ஆலயம் பிரதான வீதியோரமாக அமைந்துள்ளது. தெவொல் கடவுள் வந்திறங்கிய அந்தப் பாறைக்குன்று ஆதி காலத்தில் துறைமுகமாக இருந்திருக்கலாம் என நம்புகின்றனர்.







**ஸ்பெஷாலிட்டி**

ஹிக்கடுவைக் கடற்பகுதி நீர்ச்சறுக்கல் விளையாட்டு (Water skiing), ஆழ்கடல் வாழ் உயிரினங்களை இரசிப்பதற்காக முக்குளித்தல் (scuba diving), நீர் மேல் மிதத்தல் (snorkeling) போன்றவற்றுக்குப் புகழ்பெற்றது.

நீச்சல் தெரியாதே எப்படி இங்கு சென்று விளையாடுவது என்று எல்லாம் யோசிக்கத் தேவையில்லை கடலலையில் விளையாட கற்றுக் கொடுக்கும் சிறு பயிற்சிக் கூடங்கள் கரையோரத்தில் உள்ளன.

நீர்விளையாட்டு உபகரணங்களையும் வாடகைக் கொடுப்பனவில் இங்கு பெற்றுக் கொள்ளலாம். பவளப்பாறைகள் செறிந்திருக்கும் கடலின் சற்றே ஆழமான பகுதியில் வித விதமான அழகிய அலங்கார மீன்கள் ஏராளமாக காணப்படுகின்றன. இதற்கென்று பிரத்தியேகமான படகுச் சேவைகள் வழங்குகின்றனர்.

படகின் கீழ்ப்பகுதிகளில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் மூலம் சவாரி செய்வதால் வண்ண வண்ண மீன்களுடன் உறவாட முடியும். அது மட்டுமின்றி ஆழ்கடல் பொக்கிஷங்களை ரசிக்க முடியும்.

அது மட்டுமின்றி கரையோரங்களில் உலா வித்திரியும் ஆமைகளைத் தொட்டு பார்க்க முடிவதோடு அவற்றுக்கு உணவு வழங்கி ஒரு செல்பி கூட எடுத்துக்கொள்ளலாம்.

ஏ.சந்தியா





# உயிர் காத்த நண்பனின் ஆவி!

உயிர் நண்பனின் பாசம் எந்தளவுக்கு இருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை. அதே நண்பனின் பிரிவு எந்த அளவு வலியை தரும் என்பதையும் நான் சொல்ல தேவையில்லை. ஆனால், அதே நண்பனால் ஏற்பட்ட திகில் அனுபவத்தை இறந்தும் எங்களைக் காத்த சம்பவத்தை சொல்லியே ஆகவேண்டும் என்று தன் திகில் அனுபவத்தைப் பகிர்ந்துக் கொள்கிறார் சிவா.

சொந்த ஊர் யாழ்ப்பாணம். நண்பனின் பெயர் இளங்கோ. சின்ன வயதில் இருந்தே நானும் அவனும் நல்ல நண்பர்கள்.

எங்கள் நண்பர் வட்டாரத்தில் பின்னாளில் ரவியும், முத்துக் குமாரும் சேர்ந்துக்கொண்டார்கள். எங்கு போனாலும் நாங்கள் நாலுபேரும் பிரிவதே இல்லை.

இளங்கோ கொஞ்சம் வசதியானவன். 3 அண்ணாக்களுக்கு வெளிநாட்டில். மேலும் இளங்கோவே சொந்தமாக மெக்கேனிக் செட் வைத்திருந்தான்.

நல்ல விலையுயர்ந்த பைக் வைத்திருந்தான். அவன் புண்ணியத்தில் எங்களுக்கும் பைக்கில் ஊர் சுற்ற கிடைக்கும்.

இளங்கோ மிகவும் கெட்டிக்காரன். நண்பர்களுக்காக எதையும் செய்வான். இளங்கோவின் அக்கா திருமண நாளுக்கு இரண்டு நாள் முன்பு நாங்கள் எல்லோரும் இளங்கோவின் வீட்டில் இருந்தோம். எங்கள் சொந்த வீட்டுத் திருமணம் போல ஓடியாடி வேலை செய்தோம்.

கல்யாண வேலையில் உதவிய நண்பர்களுக்காக இளங்கோ அவனது அத்தை வீட்டில் ஒரு பார்ட்டி நடத்த ஏற்பாடு செய்திருந்தான்.

இளங்கோவின் வீட்டில் இருந்து 20 கிலோமீற்றர் தூரம் செல்லவேண்டும். அவனது அத்தை வீட்டுக்கு நானும் ரவியும் சைக்கிளில் மாலை 6.00 மணிக்கு கிளம்பினோம்.

இளங்கோ வீட்டில் கொஞ்சம் வேலையாக இருந்தான் நீங்கள் சைக்கிளில்தானே போறீங்க போங்கள் நான் பைக்கில் உங்கள் பின்னாலேயே வந்துவிடுவேன் என்றான்.

நாங்களும் சென்றோம். சிறிது நேரத்தில் எங்களுக்கு பின்னால் பைக்கில் வேகமாக இளங்கோ வந்துகொண்டிருந்தது தெரிந்தது.

அவன் எங்களைப் பிடிப்பதற்காக வேகமாக பைக்கில் வந்து கொண்டிருந்தான். நாங்களும் பைக்கா? சைக்கிளா? என்று பார்ப்போம் என்று வேகமாக ஓட, ஒரு கட்டத்தில் இளங்கோ எங்களை முந்தி சிறிது தூரம் சென்று எங்கள் பக்கமாக பைக்கை திருப்பியபோது பின்னால் இருந்து வேகமாக லொறி ஒன்று வந்தது இளங்கோ பின்னால் லொறிடா என்று கத்துவதற்குள் அவன் மீதுமோதி விட்டது லொறி.

இரத்த வெள்ளத்தில் கண்முன்னே துடிதுடித்து இறந்தான் இளங்கோ. அந்தக் காட்சியை நேரில் கண்ட நான் அந்த நொடியே பாதி இறந்துவிட்டேன்.

அவனை அடக்கம் செய்யும் வரை அந்த விபத்துதான் கண்முன்னே வந்துகொண்டிருந்தது. திருமண நாளில் மரணம். இளங்கோவின் குடும்பம் உடைந்துபோனது. மங்கல நிகழ்விற்கு வந்த உறவுகள் அமங்கல நிகழ்வில் பங்கேற்று திரும்பினர்.

இளங்கோவின் மறைவை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. உயிர் நண்பனின் உயிர் கண்முன்னே பறிக்கப்பட்டதை எப்படித்தாங்க முடியும். ஒரு மாதம் கடந்தது. இளங்கோவின் மரணம் மட்டும் யாருக்கும் மறக்கவில்லை. ஊரில் உள்ளவர்கள் அவன் ஆவியாக அலைவதாகவும், விபத்து நடந்த இடத்தில் அவன் ஆவியைக் கண்டதாகவும் சொல்லி பரபரப்பைக் கிளப்பினார்கள். யாருமே பொழுது சாய்ந்த பிறகு அந்தப்பக்கமே செல்ல மாட்டார்கள்.

டவுனுக்கு செல்பவர்களாக இருந்தால் இரண்டு மூன்று பேர் சேர்ந்து சைக்கிளில் செல்வார்கள். குறித்த கடைக்கு முன் சைக்கிளை நிறுத்திவிட்டு அங்கிருந்து பஸ்ஸில் செல்வார்கள். இளங்கோ விபத்துக்குள்ளான இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் சென்றால் பிரதான வீதி வந்துவிடும்.

ரவியின் மாமாவுக்கு உடம்பு சரியில்லை டவுனுக்கு சென்றுதான் மருந்து வாங்கி வர வேண்டும். ரவி இரவு 9.00 மணிக்கு என்னைத் தேடி வந்தான் தனியா அந்த பாதையில் செல்ல அச்சமாக உள்ளது என்னோடு நீயும் வா என்றான் நானும் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றேன்.

இளங்கோ இறந்த இடம் வருவதற்கு முன் ரவி பதற்றத்தில் கொஞ்சம் தடுமாறினான். சரி நான் முன்னால் செல்கிறேன் நீ பின்னால் வா என்றேன். சரியா அந்த இடம் வந்ததும் என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. கண்களில் கண்ணீர் வர வேகமாக சைக்கிளை மிதித்தேன்.

குறித்த இடத்திற்கு வந்ததும் என்னால் சைக்கிளை மிதிக்க முடியவில்லையா? அல்லது சைக்கிள் தானாக நகரவில்லையா தெரியவில்லை. சட்டென நின்றது. அதன் பின் வேகமாக மிதித்துக்கொண்டு சென்றபோது எனக்கு பின்னால் யாரோ உட்கார்ந்து இருப்பதைப் போல உணர்ந்தேன். பின் பகுதி பாரமாக இருந்தது என்னால் சைக்கிள் மிதிக்க முடியவில்லை. அதுமட்டுமா என் தோளை யாரோ பற்றியிருப்பது போலவும் இருந்தது.

உடல் நடுங்கியது. திரும்பிப் பார்க்க தைரியம் இல்லை. வியர்த்துக் கொட்டியது. சம்பவம் நடந்த இடத்தை கடந்து சிறிது தூரம் வந்ததும் படார் என்று சைக்கிள் தடம் புரண்டு கீழே விழுந்தேன்.

அடுத்த நொடி காற்றுபோல் எனக்கு பின்னால் ஒரு உருவம் மறைந்ததை கண்டேன். அதிர்ச்சியில் உறைந்துபோனேன். அடுத்த நொடி பின்னால் வந்து ரவி சொன்னது என்னை நிலைகுலையச் செய்தது.

ஆம் எனது சைக்கிள் கீழே விழுந்தபோது அதிலிருந்து புகைபோல உருவம் மாயமாய் மறைந்ததையும் அவன் கண்டிருக்கிறான்.

அந்த உருவம் இளங்கோதான் என்பதை உணர்ந்து அதிர்ச்சியானோம். பயத்தை மீறி கவலையும் வேதனையும் எங்களை ஆட்கொண்டது. சைக்கிளைப் போட்டு விட்டு இருவரும் அந்த இடத்திலேயே அமர்ந்து வாய்விட்டு கதறி அழுதோம்.

சிறிது நேரம் அழுதுவிட்டு மீண்டும் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்றபோது குறித்த நேரத்துக்குரிய பஸ் எங்களை கடந்து சென்று விட்டது.

இனி அடுத்த பஸ்ஸிற்காக சில மணி நேரம் காத்திருக்க வேண்டியாதாகியிருக்கும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அங்கிருந்தே சிலர் பதறிக்கொண்டு பஸ்போன திசையை நோக்கி ஓடினார்கள். காரணம் கேட்டபோது அதிர்ந்து போனோம். நாங்கள் செல்ல வேண்டிய பஸ் சிறிது தூரத்தில் விபத்துக்குள்ளாகி விட்டதாம். விபத்தில் 15 பேருக்கு பலத்த காயம், 2 பேர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள்.

இறந்துபோன இளங்கோ தடுக்காதிருந்தால் அன்று அந்த விபத்தில் நாங்களும் சிக்கியிருப்போம். நண்பன் எங்களை அன்று காப்பாற்றிவிட்டான். சம்பவம் நடந்த அன்றுதான் இளங்கோ இறந்து 16 ஆவது நாள் காரியம் நடந்தது. எங்களைக் காத்த நண்பன் இளங்கோ எங்கள் மனதை விட்டு என்றுமே மறைய மாட்டான்.

- ரிஷி

# சமத்துவம் பேணிய வாக்காளர்கள்; சாதிப்பார்களா மலையகத் தலைமைகள்?



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு!

ஒன்றுபடாமல் தனித்து அரசியலில் பயணித்த மலையகத்தின் கட்சிகள் சில ஒன்றுபட்டு செயற்பட முனைந்ததன் அறுவடையை இத்தேர்தலில் அவர்கள் பெற்றுள்ளனர்.

மலையக அரசியலில் 1994, 2004ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகளவிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவான பாராளுமன்றத் தேர்தலாக இத்தேர்தல் பதிவாகியுள்ளது.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் தேசியப் பட்டியலில் தெரிவானவர்களும் அடங்கலாக 10 பேர் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர். அதன் பின்னரான தேர்தல்களில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் குறைந்தே வந்துள்ளது.



இந்நிலையில் 2015 பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி 15 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்த இம்முறை 9 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியன கூட்டாக தமிழ் முற்போக்கு கூட்டணியாக களமிறங்கிய நிலையில், போட்டியிட்ட 9 வேட்பாளர்களில் 6 பேர் தெரிவாகியுள்ளதுடன், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கான மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் சார்பில் பழனி திகாம்பரம் (105,528), வே.இராதாகிருஷ்ணன் (87,375), எம்.திலக்ராஜ் (67,761) ஆகியோரும் பதுளை மாவட்டத்தில் அ.அரவிந்தகுமாரும் (53,741), கண்டி மாவட்டத்தில் வேலுகுமாரும் (62,556), கொழும்பு மாவட்டத்தில் மனோ கணேசனும்(69,064) தெரிவாகியுள்ளனர்.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரலாற்றில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ள இவ்வேளையில், நுவரெலியா மாவட்டத்தின் சார்பில் ஆறுமுகன் தொண்டமானும் (61,897)முத்து சிவலிங்கமும்(45,352) மாத்திரமே தெரிவாகியுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து போட்டியிட்ட பதுளை, கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் தோல்வியையே தழுவியுள்ளது.

இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் நேரடி வேட்பாளராக பதுளையில் களமிறங்கிய வடிவேல் சுரேஸும்(52,378) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதே வேளை தேசிய பட்டியலில் தெரிவுகளின் போது இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மலையக அரசியலை பொறுத்தவரை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு ஏகோபித்த ஆதரவினை மக்கள் வழங்கியுள்ள அதே சமயம் மலையக கட்சிகளின் அடிப்படையில் நோக்கும்போது சமவலுத்தன்மைகொண்ட பிரதிநிதித்துவத்தையே மக்கள் வழங்கியுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் இருவரும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் இருவரும், மலையக மக்கள் முன்னணி சார்பில் இருவரும், ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினை எதிர்த்து அரசியல் நடத்த வந்தவர்களில் பழனி திகாம்பரம் நுவரெலியா மாவட்டத்தில் 105,528 வாக்குகளை பெற்றுள்ளமை வரலாற்றில் முக்கிய பதிவாகும்.

அதேபோல் மலையக மக்களின் சார்பில் பாராளுமன்றத்திற்கு புதிய வரவாக தொழிலாளர் தேசிய சங்கம் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் எம்.திலக்ராஜ், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் பதுளை மாவட்டத்திலிருந்து அ.அரவிந்தகுமார், ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் கண்டியிலிருந்து வேலுகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் கூட்டணி சார்பில் வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து ஒவ்வொருவரை தெரிவு செய்துள்ளனர்.

இத்தேர்தல் முடிவுகளின் படி கடந்த காலத்தில் மலையக மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாதுபோன மாவட்டங்களில் இம்முறை இருப்பை உறுதி செய்து கொண்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலிருந்து 1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்தவொரு உறுப்பினரும் தெரிவாகியிருக்கவில்லை. அதேபோல் 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதுளை மாவட்டத்திலிருந்து எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தெரிவாகியிருக்கவில்லை. இந்நிலையில் மலையக மக்கள் செறிந்து வாழ்கின்ற நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை அமைக்கின்றது. சிறுபான்மை மக்கள் அதிகளவில் வாழும் மாவட்டங்களிலேயே அதிகளவிலான ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் மலையக மக்களின் பெருமளவிலான ஆதரவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, அமையப்போகும் அமைச்சரவையில் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பலர் அமைச்சர்களாகவும் இராஜாங்க அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகவே உள்ளன.

இதே சமயம் தேசியக் கட்சிகளை பொறுத்தவரையில் மலையக மக்களின் பிரச்சினைக்கு போதுமான எந்தவொரு தீர்வையும் இதுவரையும் வழங்கவில்லை.

இந்நிலையில் பலமான பல்வேறு வாக்குறுதிகளின் அடிப்படையில் களமிறங்கிய தமிழ் முற்போக்கு கூட்டணி பேரம் பேசும் சக்தியை வலுப்படுத்தியுள்ளது.



இதே வேளை, கடந்தகால வரலாற்றில் மலையக மக்கள் சார்பில் பேரம் பேசும் சக்தியாகவும் ஆட்சியமைக்கும் அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஆட்சியில் பங்குதாரராக மாறுவதற்குரிய சந்தர்ப்பமும் உள்ளது.

இந்நிலையில் இவை எவ்வாறு மலையக மக்களின் பிரச்சினைகளை அணுகப்போகின்றன? என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

திநவராஜ்

# பெண்கள் மட்டுமே வாழும் அதிசய கிராமம்



வட கென்யாவில் இருபத்தைந்து ஆண்டுகளாக பெண்கள் மட்டுமே வாழும் ஒரு கிராமம் தனது தனித்தன்மையால் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கென்ய நாட்டின் தலைநகரான நைரோபி நகரிலிருந்து 380 கி.மீற்றர் தொலைவில் உள்ள சம்புரு பகுதியில் இந்த உமோஜா கிராமம் அமைந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், குழந்தைத் திருமணம், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட 15 பெண்கள் கூட்டாக இணைந்து 1990-இல் வாழத் தொடங்கிய இந்த கிராமம், தற்போது 47 பெண்கள் மற்றும் 200 குழந்தைகளுடன் ஆண் வாடையே இல்லாத அபூர்வ கிராமமாக மாறியுள்ளது.

பிரிட்டன் இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்ட ரெபேக்கா லோலோசோலி என்றப் பெண் இந்த கிராமத்தின் தலைவியாக செயல்பட்டு வருகிறார். இந்த கிராமப் பெண்கள் நகை செய்து விற்பதின் மூலமாகவும், இந்தப் பகுதியிலேயே கூடாரங்களால் ஆன ஒரு சிறிய சுற்றுலாத்தளத்தை ஏற்படுத்தியுள்ளதன் மூலமாகவும் இவர்கள் தங்களின் வாழ்க்கை செலவினங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்போதும், அடிமைப் போல நடத்தும் ஆண்களுக்கிடையே வாழும் பெண்கள் தமது வாழ்வில் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், அவர்களைப் போலன்றி தமது வாழ்க்கை சுதந்திரமானதாக அமைந்திருப்பதாக இந்தப் பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கிராமத்துக்குள் செல்ல ஆண்களுக்கு தடையேதும் இல்லை. எனினும், அவர்கள் இந்தப் பெண்களின் அனுமதியின்றி வெகுநாட்கள் இங்கே தங்கியிருக்க முடியாது.

பெண்கள் மட்டுமே இருக்கும் கிராமம் என்பதால் அக்கம்பக்கத்து கிராமங்களில் உள்ள ஆண்கள் அவ்வப்போது அத்துமீறி செயல்படுவதுண்டு. எனினும், அனைத்து தடைகளையும் தைரியமாக எதிர்கொண்டு, இந்த 247 பேரும் பத்து குடும்பங்களாக ஒற்றுமையுடன் வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது.

# அனுபவத்தைக் கொண்டு எனது பணி தொடரும்



பதுளை மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் என்னை 52ஆயிரத்து முன்னூற்று எழுபத்தெட்டு வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து வெற்றியடைய வைத்தமைக்கு எமது இதயம் கனிந்த நன்றியை எம்மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேனென்று பதுளை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்; ஊவா மாகாண உறுப்பினராக தெரிவாகிய நான், ஊவா மாகாண சபையின் ஆட்சி மாற்றத்திற்கு பெரும் பங்களிப்புக்களை வழங்கி ஹரின் பெர்ணான்டோவை ஊவாவின் முதலமைச்சராக்க உதவினேன்.

அதனடிப்படையில் ஊவா மாகாணத்தில் மாகாண தமிழ்க் கல்வி அமைச்சுடன் ஆறு அமைச்சுக்களைப் பொறுப்பேற்று எமது சமூக மேம்பாடுகளுக்கு என்னால் இயன்ற வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தேன். ஊவா மாகாணத்தில் இல்லாமல் போயிருந்த தமிழ்க் கல்வி அமைச்சை ஏற்படுத்தி சாதனையை உருவாக்கினேன். இனிமேல் எக்காரணம் கொண்டும் ஊவா மாகாண தமிழ்க்கல்வி அமைச்சை எவராலும் இல்லாமல் செய்து விட முடியாது. அத்துடன் மாகாண தமிழ் சாகித்திய விழாவையும் வெற்றிகரமாக மேற்கொண்டேன். இனிமேல் வருடாவருடம் மாகாண தமிழ் சாகித்திய விழாவும் தொடர்ந்து இடம்பெறும்.

இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றம் தெரிவாகியுள்ளேன். ஏற்கனவே பாராளுமன்றம் தெரிவாகியிருந்து பிரதி சுகாதார அமைச்சராக பதவியேற்று எமது சமூகத்திற்கு பெரும் சேவைகளை செய்துள்ளேன். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு புதிய பாராளுமன்றத்தில் எமக்கு கிடைக்கும் பதவியில் எமது மக்களுக்கு பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

எனது வெற்றிக்கு பாடுபட்டு உழைத்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# பாராளுமன்றத் தேர்தல் 2015

05ஆம் பக்கத் தொடர்ச்சி

**இரத்தினபுரி**

ஐக்கிய தேசியக் கட்சி- 284,117 வாக்குகள் 5 ஆசனங்கள், சுதந்திர முன்னணி 323,636 வாக்குகள் 6 ஆசனங்கள் மக்கள் விடுதலை முன்னணி 21,525 வாக்குகள்

**கேகாலை**

ஐக்கிய தேசியக் கட்சி 247,467 வாக்குகள் 5 ஆசனங்கள், சுதந்திர முன்னணி 227,208 வாக்குகள் 4 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 18,184 வாக்குகள்

**குருணாகல்**

ஐக்கிய தேசியக் கட்சி 441,275 வாக்குகள் 7 ஆசனங்கள்

சுதந்திர முன்னணி 474,124 வாக்குகள் 8 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 41,077 வாக்குகள்

**புத்தளம்**

ஐக்கிய தேசியக் கட்சி - 180,185 வாக்குகள் 5 ஆசனங்கள், சுதந்திர முன்னணி 153,130 வாக்குகள் 3 ஆசனங்கள்: மக்கள் விடுதலை முன்னணி 12,211 வாக்குகள்

**அநுராதபுரம்**

ஐக்கிய தேசியக் கட்சி 213,072 வாக்குகள் 4 ஆசனங்கள்,

சுதந்திர முன்னணி 229,856 வாக்குகள் 5 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 28,701 வாக்குகள்

**பொலன்னறுவை**

ஐக்கிய தேசியக் கட்சி 113,845 வாக்குகள் 3 ஆசனங்கள், சுதந்திர முன்னணி 103,172 வாக்குகள் 2 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 13,497 வாக்குகள்

**அம்பாந்தோட்டை**

சுதந்திர முன்னணி 196,980 வாக்குகள் 4 ஆசனங்கள், ஐக்கிய தேசியக் கட்சி 130,433 வாக்குகள் 2 ஆசனங்கள் மக்கள் விடுதலை முன்னணி 36,527 வாக்குகள் 1 ஆசனம்





**காலி**

சுதந்திர முன்னணி 312,518 வாக்குகள் 6 ஆசனங்கள், ஐக்கிய தேசியக் கட்சி 265,180 வாக்குகள் 4 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 37,778 வாக்குகள்

**மாத்தறை**

சுதந்திர முன்னணி 250,505 வாக்குகள் 5 ஆசனங்கள், ஐக்கிய தேசியக் கட்சி 186,675 வாக்குகள் 3 ஆசனங்கள்

மக்கள் விடுதலை முன்னணி 35,270 வாக்குகள்

**திகாமடுல்லை**

ஐக்கிய தேசியக் கட்சி 151,013 வாக்குகள் 4 ஆசனங்கள்

சுதந்திர முன்னணி 89,334 வாக்குகள் 2 ஆசனங்கள் இலங்கை தமிழரசு கட்சி 45,421 வாக்குகள் 1 ஆசனம்

**திருகோணமலை**

ஐக்கிய தேசியக் கட்சி 83,638 வாக்குகள் 2 ஆசனங்கள், இலங்கை தமிழரசுக் கட்சி 45,894 வாக்குகள் 1 ஆசனம், சுதந்திர முன்னணி 38,463 வாக்குகள் 1 ஆசனம்

**யாழ்ப்பாணம்**

தமிழரசுக் கட்சி 207,577 வாக்குகள் 5 ஆசனங்கள், ஈ.பி.டி.பி 30,232 வாக்குகள் 1 ஆசனம், ஐக்கிய தேசியக் கட்சி 20,025 வாக்குகள் 1 ஆசனம்

**வன்னி**

தமிழரசு கட்சி 89,886 வாக்குகள் 4 ஆசனங்கள், சுதந்திரக் முன்னணி 20,965 வாக்குகள்1 ஆசனம், ஐக்கிய தேசியக் கட்சி 39,513 வாக்குகள் 1 ஆசனம்


**மட்டக்களப்பு**

தமிழரசுக் கட்சி 127,185 வாக்குகள் 3 ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரஸ் 38,477 வாக்குகள் 1 ஆசனம், ஐக்கிய தேசியக் கட்சி 32,359 வாக்குகள் 1 ஆசனம்

இந்தத் தேர்தலில் வாக்களிப்பு நடவடிக்கைகளில் 125,000 அரச ஊழியர்களும் வாக்கு எண்ணும் செயற்பாடுகளில் 75,000 பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததோடு, 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸாரும் தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் பெப்ரல் அமைப்பு 12,314 தேர்தல் கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்தியிருந்ததோடு, உள்நாட்டு மற்றும் சர்வ தேச ரீதியில் 30 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் தேர்தலை கண்காணிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கவிதைத் துளிகள்



## வார்த்தைப் புதிர்

### இடமிருந்து வலம்

01. நகைகள் செய்ய பயன்படும் உலோகம்.
04. மட்டாண்டம் (குழம்பியுள்ளது).
05. காய்ச்சல் வந்தால்...... வரும்
08. வரதட்சணை.
09. ஆசியாவில் தென்கிழக்குப்பகுதியில் அமைந்த நாடு. (குழம்பியுள்ளது).
10. விளையாட்டுப் பொருட்களுள் ஒன்று.
12. விஷ்ணுபகவானின் வேறு பெயர்களில் ஒன்று (குழம்பியுள்ளது).
14. ஒருவரை தனக்குக் கீழ் அடிமைப்படுத்துதல்.

### மேலிருந்து கீழ்

01. மர வேலை செய்பவர்.
02. ஒரு உறவு முறை (குழம்பியுள்ளது).
03. இராமாயணத்தில் வரும் படகோட்டி.
06. மார்கழி மாதத்தின் ஆங்கிலப் பதம். இதன் கடைசி எழுத்துஇல்லை.
07. ஒரு தமிழ்த் திரைப்பட நடிகர்.
08. இவர் தமிழ்த் திரைப்பட இயக்குநரும், நடிகரும் ஆவார்.
09. பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு.
11. இது வரும் வேளையிலே சிரிங்க!.
12. ஒரு உணவு (குழம்பியுள்ளது)
13. நாடு.



## தலைவன்...!

ஐயா....! பெரியவரே
மலையில் பிறந்த
மலைக் குருவி பாடுகிறேன்
கேளுங்கள்...!
வியர்வையின்
சுவை கண்டதுண்டா?
உங்கள் வியர்வை
மண்ணில்தான் வீழ்ந்ததுண்டா?
உதிரம் கண்டதுண்டா?
உங்கள் உதிரத்தை
அட்டைக்கு பருக
கொடுத்ததுண்டா?
காடுகளை வெட்டி
கை ரணப்பட்டதுண்டா?
கன்றுகளை நாட்ட -உன்
கரம் மண்வெட்டி
பிடித்ததுண்டா?
உண்ண உணவின்றி
உடுத்த துணியின்றி...!
உயிர் வாழ்ந்ததுண்டா?
பசிக் கொடுமையில்
வயிறு காய்ந்திட
நீரை மட்டும் அருந்தி
நிம்மதியின்றி உறங்கியதுண்டா?
லயன் அறைகளில்
வாழ்ந்ததுண்டா? -அந்த
வாழ்க்கையில்
இன்பம், துன்பம் ..!
கண்டதுண்டா?
பசியோடு,
பள்ளிக்கூடம் போனதுண்டா?
பகல் நேரம்
மயக்கம் வந்து வீழ்ந்ததுண்டா?
பணமின்றி
கால் நடையாய்
கல்லூரி போனதுண்டா?
இவை எல்லாம் உணர்ந்த
மலை தாய் மகன் எவனோ?
அவனே மலை மண்ணுக்கு நல்ல
தலைவன்
இவனால் மட்டுமே...!
வலி உணர்ந்து -எம்
வாழ்வுக்கு ஒளியேற்றமுடியும்

ந.ஜனார்த்தன்,ஹொப்டன்.

## உயிரின் புன்னகை

எனக்கு உயிர் கொடுத்த உன்
புன்னகை
உனக்குள்ளே புதைந்து
போனதால்
உயிருக்காய் போராடுகிறேன்..
எப்போது என் முகம்
பார்த்து புன்னகைக்கப்
போகிறாய்?

ஐ.வேணுஜா,கஹவத்தை.



## காதல்

காதலின் முடிவு
திருமணம், மரணம்
என்று தான் நான்
கேள்விப்பட்டிருக்கிறேன்
ஆனால், நீ சொல்கின்றாய்
காதலின் முடிவு பிரிவு
மட்டும்தான் என்று
என் உயிர் உடலை விட்டு
பிரிந்தாலும் நான் உன்னை விட்டு
பிரிய மாட்டேன்
நான் உன்னைக் காதலிப்பது
உன்னோடு வாழ மட்டுமல்ல
உனக்காக மட்டும் வாழ....

திருமகள்,வவுனியா.

## உன்பதிலுக்காக?



எனக்காக பிறந்த நீ
எதற்காக மறுக்கிறாய்?
பூட்டியிருக்கும் கனவுகளை
சொல்லி அனுப்பு கடிதத்தில்
ஏழேழு ஜென்மங்கள்
தாண்டினாலும்
தேடி வருவேன் உன்னிடம்
காத்திருக்கும் உன்பதிலுக்காக
உன்காதலி

சி.கிருஷிகா,வவுனியா.

## பணக்கார கடன்காரர்



கோடீஸ்வரர் வீட்டுக்கு
குழந்தை பராமரிக்க
போனேன்
வங்கி விடுமுறையாம்
நாட்கூலியை
நாளை தருவதாய்
மாலை சொன்னார்
ஒன்றுமில்லாத
ஏழைகளிடமும்
ஒரு நாளாவது
கடன்காரர்
ஆகிவிடுகிறார்கள்
பெரும் பணக்காரர்கள்

ஐ.வேணுஜா,கஹவத்தை.



## விஜயில் ஒரு இரசனை

தமிழ் சினிமாவின்
கதா நாயகனே
விஜய் வாழ்க!
உன் நடிப்பில் -ஒரு
மயக்கம் -உன்
சிரிப்பில் ஒரு
நகைச்சுவை -உன்
வார்த்தையில் ஒரு
இரசனை -உன்
நடனத்தில் ஒரு
காதல்- உன்
பாடலில் ஒரு
நட்பு -உன்
சண்டையில் ஒரு
சிந்தனை
பற்களிலும் -ஒரு
பொன் சிரிப்பு....உன்
நடிப்பில் எனக்கொரு அன்பு
இளைய தளபதி பட்டம் முடித்து
சுப்பர் ஸ்டார் பட்டம் பெற
வாழ்த்துகிறேன்

கோ.சிந்துஜா,வசந்தபுரம்.

## கண்கள் தெரியாத காதல்

வீட்டில் ஓர் விண்ணப்பம்
போட்டிருந்தாய்
பொய்யான விண்ணப்பம்
என்று தெரியாமலே
உன்னைக் கண்காணிக்கவில்லை
வீட்டில் ஒரே முரண்பாடு
ஒற்றுமைகள் சீர்குலைந்ததன்று
வாசற்படி அருகே
கால் தடங்கள் பல
போன் றிங்பண்ணும் போது பலவாயின
என்னென்று கேட்டோம்
கசக்கிய பேப்பர் போல்
கடுகடுத்தது முகம்
புளிச்ச பழம் சோறு
அவனென எடுத்துக் கூறியும்
பொய்ப் பித்தலாட்டம் ஆடியே
அவன் பின்னே செல்கிறது
அவள் கால்கள்

சு.தேவலோஜன்,தம்பலவத்தை.



## ஹைக்கூ கவிதைகள்

இதயம்
என் இதயத்தில் நீ வாழ்வதனால் தானோ
என் இதயத் துடிப்பை என்னால் மட்டுமே
உணரமுடிகிறது

காதல்
நான் உன்னை காதலிக்கவில்லை என்று
என் கண்களைப் பார்த்துச் சொல்
அக்கணமே தெரியுமடி உன் கபட நாடகம்

மௌனம்
வார்த்தைகள் தேடினேன் உன்னை
வர்ணிக்க கிடைக்கவில்லை என்றதும்
உன் முன்னே மௌனமாகிறேன்

ப்ரக்யா,பதுளை.

உதய சூரியன் "கவிதைச்சாரல்"
சியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 58, வெள்ளவத்தை வீதி, கொழும்பு-15.
பெயர்: ------------------------
முகவரி: ------------------------
தொலைபேசி இல ------------------------


என்னை
யார் என்று
தெரிகிறதா?
06 ஆம் பக்கத்
திற்கான விடை
பிரபாஸ்



விடை
சொல்லவாங்க..!
விடைகள்:

1. நுளம்பு2. கொக்கு.
3. காகம்.4. கொடி.5. நத்தை.

புதிர்களுக்கான விடை 15 ஆம் பக்கத்திற்கான விடை






**புதிர் BOX 03 ஆம் பக்கத்திற்கான விடைகள்**

**02.** சுருதி ஹாசன்,சமந்தா,பிரியாமணி, நயன்தாரா,மும்தாஜ்,நஸ்ரியா, வித்யா பாலன், தமன்னா, அசின். **03.** திரிஷா

**04.** 01 அடிமட்டம்,02 பூச்சாடி 03கப்,04சட்டைபொத்தான்,05 பொட்டு, 06வலையல்

**05.** 01. ஜோடி, 02. ராஜா ராணி, 03. மனம் கொத்தி பறவை, 04. தேசிங்கு ராஜா, 05. அம்மாவின் கைபேசி, 06. மௌனராகம் 07. அக்னிநட்சத்திரம் 08. ரோஜா 09. பணக் காரன் 10. மன்மதன் அம்பு 11. காதலிக்கநேர மில்லை12. மின்சாரக்கனவு 13. துப்பாக்கி 14. நாய் குட்டி 15. லவ் டுடே

சென்ற வார விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | ணி | ■ | ■ | ■ | 2 மே | க | 3 நா | த | 4 ன் |
| ■ | ■ | 5 ட | ■ | ■ | ■ | ■ | ட் | ■ | ர |
| 6 சே | வ | க | ம் | ■ | 7 க | ■ | டா | ■ | சோ |
| து | ■ | க | ■ | 8 ம | ன | தா | மை | ■ | ■ |
| ■ | 9 ந | ம் | க | ■ | ன் | ■ | ■ | ■ | ■ |
| ■ | வ | ■ | ■ | 10 க | ட | 11 ல | ■ | 12 ரு | சி |
| 13 க | ர | ண் | டி | ■ | 14 ம | க | ரோ | து | ■ |
| ■ | த் | ■ | ■ | ■ | ■ | ய | ■ | க் | ■ |
| ■ | தி | ■ | ■ | ■ | 15 லை | சி | ■ | கி | ■ |
| 16 வ | ன | ம் | ■ | 17 பா | ச | ம் | ■ | ■ | ■ |

# மலையகத் தலைமைக் கிரீடம்

(07ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

ஜனாதிபதி தேர்தலின் இ.தொ.கா மஹிந்தவை ஆதரித்த போதும் மலையக மக்கள் இ.தொ.காவின் பேச்சை உதாசீனம் செய்து விட்டே மைத்திரியை ஆதரித்திருந்தனர். அப்போதே இ.தொ.காவின் மக்கள் செல்வாக்கு கேள்விக் குட்படுத்தப்பட்டிருந்தது.அப்போதே இ.தொ.கா. விழித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், மறுமுறையும் சுதந்திரக் கூட்டணியோடு இணைந்து அக்கினிப் பரீட்சைக்குத் தயாராகி இப் போது கையைச் சுட்டுக் கொண்டிருக்கிறது.

இ.தொ.கா விற்கு சவால் விட கூடியவர் எதிர் போட்டியாளர் யாரும் இல்லையென அதன் உபதலைவர்கள் வாய்ச் சவால்கள் விட்டாலும் இ.தொ.கா.வின் நேர் எதிரி திகாம்பரம் வெற்றி பெற்று தொண்டமான் தலையிலிருந்த கிரீடத்தை தட்டிப்பறித்திருக்கிறார்.

மலையகத்தில் அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி இம்முறை மலையகத்தில் ஆழ கால்பதித்துள்ளது. நுவரெலியாவில் மட்டுமல்ல பதுளை, கண்டி, கொழும்பிலும் அக்கூட்டணி சார்பாக போட்டியிட்ட அனைவரும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

தமிழ் முற்போக்கு கூட்டணியா? அது எங்கிருக்கிறது என நக்கலாக கேட்ட தொண்டமானுக்கு இதோ நாங்கள் உங்களுக்கு எதிரில் இருக்கிறோம் என முற்போக்கு முன்னணி காட்டியிருக்கிறது. அதிலும் முன்னணியின் உபதலைவர் பழனி திகாம்பரம் 105,528 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். அத்தொகை ஏறத்தாழ இ.தொ.கா. தலைவரும் பொதுச் செயலாளரும் இணைந்து பெற்றுக்கொண்ட வாக்குகளுக்கு சமனாக அமைகிறது.



**நுவரெலியா மாவட்ட விருப்பு வாக்கு விபரம் இவ்வாறு அமைகிறது**

**ஐ.தே.க-05 ஆசனங்கள்**
திகாம்பரம்-105,528
வீ.இராதாகிருஷ்ணன்-87,375
எம்.திலகராஜ்-67,761
நவீன் திசாநாயக்க-66,716
கே.கே.பியதாஸ-48,365

**ஐ.ம.சு.கூ-03 பேர்**
ஆறுமுகன்-61897
சி.பி.ரத்நாயக்க-45649
முத்துசிவலிங்கம்-45352

நுவரெலியாவில் இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொண்ட இ.தொ.கா விற்கு மலையகத்தில் ஏனைய பகுதிகளிலும் பலத்த தோல்வியே ஏற்பட்டுள்ளது.

**செந்திலின் ஆருடங்களை பொய்யாக்கிய பதுளை களநிலைவரம்.**

இ.தொ.கா. வின் வாக்கு பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதே தவிர குறைந்ததாய் இல்லை. பதுளையில் நிச்சயம் ஒரு ஆசனத்தை பெறுவோம் தேசியக் கட்சிகளில் போட்டியிடும் தமிழ் உறுப்பினர்களை வெல்ல முடியாது என புள்ளிவிபரங்களையெல்லாம் காட்டிய செந்திலின் ஆருடம் அனைத்தும் பொய்த்து போனதுடன் பதுளையில் இ.தொ.கா. வின் வாக்கு வங்கி பெரும் சரிவை சந்தித்துள்ளது.

இத் தேர்தலில் பதுளையில் இ.தொ.கா பெற்ற வாக்குகளையும் மாகாணசபை தேர்தலில் பெற்ற வாக்குகளையும் ஒப்பிட்டு பார்க்கும் பட்சத்தில் நாம் கூறும் யதார்த்த நிலை விளங்க கூடியதாக இருக்கும்.

பதுளையில் மொத்தமாக 10,259 வாக்குகளை மட்டுமே இ.தொ.கா வால் பெறமுடிந்த நிலையில் ஐ.தே.கா வில் களமிறங்கிய அரவிந்த குமார் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோர் அமோக வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். பதுளை மக்கள் செல்வாக்கு இ.தொ.கா வுக்கு இருப்பதாக கூறிவரும் நிலையில் அரவிந்த குமாரை 53,741 வாக்குகளாலும் வடிவேல் சுரேஷ் 52,378 வாக்குகளாலும் வெற்றிபெற வைத்து அழகு பார்த்திருப்பது இந்த பதுளை மக்களே.

**கண்டி, கேகாலையிலும் இ.தொ.கா சரிவு**

இ.தொ.கா. வின் மக்கள் செல்வாக்கு பதுளையில் சரிவு கண்டது போலவே கேகாலை மற்றும் கண்டியிலும் இ.தொ.கா பெரும் வாக்கு சரிவை சந்தித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. கேகாலை மற்றும் கண்டியில் இ.தொ.கா சார்பில் ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினர் களை கடந்த மாகாணசபை தேர்தலில் வெற்றிப்பெற்றிருந்தது. அத்தேர்தலில் சேவல் சின்னத்தில் தனித்து போட்டியிட்டே ஒவ்வொரு ஆசனங்களையும் பெற்றிரு ந்தது. இவ்வாறு மாகாணசபை உறுப்பினரை வெல்ல வைக்கக் கூடிய வாக்கு பலத்தை கொண்ட இ.தொ.கா கண்டியிலும் கேகாலையிலும் பெற்றுக்கொண்ட வாக்குகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கேகாலையில் 2,442 வாக்குகளையும், கண்டியில் 4,400 வாக் குளையுமே இ.தொ.கா வால் பெற முடிந்தது. ஆக இ.தொ.கா விற்கு யாரும் போட்டியில்லை என குரலை உயர்த்தும் உப தலைவர்கள் [?] இ.தொ.கா வின் சரிவை ஏற் றுக்கொள்ளத் தான் வேண்டும்.



இதே நேரம் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பாக ஐ.தே.கா.வில் களமிறங்கிய வேலுகுமார் [கண்டி], மனோகணேஷன் [கொழும்பு] ஆகியோரும் வெற்றிப் பெற்றுள்ளனர்.

கண்டியில் இரு தசாப்தங்களாக கை நழுவிப்போயிருந்த தமிழ் பிரதிநிதித்துவத்தை கண்டி மக்கள் மீண்டும் உறுதி செய்துக் கொண்டுள்ளனர். இத் தேர்தலில் 62,556 வாக்குகளைப் பெற்று வேலுகுமார் வெற்றியீட்டியதோடு கொழும்பில் மனோகணேஷன் 69,064 வாக்குகளை பெற்றுகொண்டுள்ளார்.

ஆக இத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி மக்கள் ஆதரவை பெற்று அமோகமாக வெற்றியீட்டியுள்ளது. இவ் வெற்றிக்கு மக்கள் ஐ.தே.கவை வெற்றி பெற வைக்கவேண்டும். இல்லையேல் மீண்டும் நாடு மஹிந்த அதிகாரத்திற்கு கீழ் சென்றுவிடும் எனும் எண் ணத்திலும் வாக்களித்திருக்கலாம்.

எது எப்படியோ மலையகம் சார்பாக 8 பேர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கு உதயசூரியன் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இ.தொ.கா வின் இந்த பின்னடைவுக்கு என்ன காரணம் சறுக்கிய இடம் எது என்பதை ஆராய்வது அதன் எதிர் கால அரசியலுக்கு உகந்ததாக அமையும் என நினைக்கிறோம்.

தாசன்



# தொண்டாவைத் தொடாத திகா!



நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெற்றிருப்பதோடு அதன் பட்டியலில் போட்டியிட்ட பழனி திகாம்பரம் 105,528 வாக்குகளைப் பெற்றிருப்பது வரலாற்றில் முக்கிய பதிவாகிறது.

இந்த அடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் ஒரு இலட்சம் வாக்குகளைப் பெற்ற 3 ஆவது வேட்பாளராக திகா இடம்பிடிக்கிறார். இதற்கு முன் 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக களமிறங்கிய ஆறுமுகன் தொண்டமான் 1,21,542 வாக்குகளையும் அதே கட்சியில் களமிறங்கிய மலையக மக்கள் முன்னணியின் மறைந்த தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் 1,21.421 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

மலையகத்தின் இரு பெரும் அமைப்புகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், மலையக மக்கள் முன்னணியும் இணைந்து ஒரே கட்சியில் களமிறங்கியதால் கிடைத்த மகத்தான வெற்றி இது.

அதேபோல திகாரம்பரம் பெற்றிருக்கும் வாக்குகளையும் தனிப்பட்ட நபரின் செல்வாக்கிற்கு கிடைத்த வாக்காக கொள்வதை விட மலையக மக்கள் முன்னணியும் தொழிலாளர் தேசிய சங்கமும் இணைந்து களமிறங்கியதாலும் நாட்டில் வீசிய ஐ.தே.க. அலையாலும் கிடைத்த வாக்காக கொள்ள முடியும்.

நுவரெலியா மாவட்ட வரலாற்றில் இது வரை இலட்சம் வாக்குகளை 3 தமிழ் வேட்பாளர்களே பெற்றிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிபெற்ற தமிழர்கள் பெற்றுக் கொண்ட வாக்கு விபரங்கள் பின்வருமாறு

**பொதுத்தேர்தல் 1994**

ஐ.தே.க
முத்து சிவலிங்கம்- 85,490
எஸ்.சதாசிவம் - 83,368
ஆறுமுகன் தொண்டமான் - 75,297

**பொதுத்தேர்தல் 2000**

ஐ.தே.க
ஆறுமுகன் தொண்டமான் - 61,779
முத்து சிவலிங்கம்- 55,673
எஸ்.ஜெகதீஸ்வரன் - 50,735

பொதுஜனஐக்கிய முன்னணி
பெரியசாமி சந்திரசேகரன்- 54,681
எஸ்.சதாசிவம் - 47,472

**பொதுத்தேர்தல் 2001**

ஐ.தே.க
ஆறுமுகன் தொண்டமான் - 1,21,542
பெரியசாமி சந்திரசேகரன்- 1,21.421
முத்து சிவலிங்கம்- 107338

**பொதுத்தேர்தல் 2004**

ஐ.தே.க
ஆறுமுகன் தொண்டமான் - 75,419
முத்து சிவலிங்கம்- 65,499
எஸ்.ஜெகதீஸ்வரன் - 64,015

மலையக மக்கள் முன்னணி
பெரியசாமி சந்திரசேகரன்- 42582

**பொதுத்தேர்தல் 2010**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
ஆறுமுகன் தொண்டமான் - 60,997
வி. இராதாகிருஷ்ணன் - 54,083
பி.இராஜதுரை - 49,228

ஐ.தே.க.
பழனி திகாம்பரம் - 39,490
ஜே.ஸ்ரீரங்கா - 33,948

**பொதுத்தேர்தல் 2015**

ஐ.தே.க
பழனி திகாம்பரம் - 105,528
வி.இராதாகிருஷ்ணன் - 87,375
எம்.திலகராஜ் -67,761

சுதந்திரக் கூட்டமைப்பு
ஆறுமுகன் தொண்டமான் - 61,897
முத்து சிவலிங்கம்- 45,352

## இம்முறை வீடு சென்ற எம்.பி. க்கள்!

யாழ் மாவட்டத்தில்..
சுரேஷ் பிரேமச்சந்திரன்
முருகேசு சந்திரகுமார்
சில்வெஸ்டர் அலன்ரின்

மட்டக்களப்பு மாவட்டத்தில்
பீ. அரியநேத்திரன்
பொன். செல்வராசா
எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்

திகாமடுல்ல மாவட்டத்தில்
ஏ.எல்.எம். அதாவுல்லா

களுத்துறையில்
மஹிந்த சமரசிங்க

மாத்தறையில்
லக்ஷ்மன் யாபா அபேவர்தன

திருகோணமலையில்
எம்.எஸ். தௌபீக்

[illegible]ாரில்
ஹுனைஸ் பாருக்

புத்தளத்தில்
கே.ஏ. பாயிஸ்

பதுளையில்
லக்ஸ்மன் செனவிரத்ன

கேகாலை மாவட்டத்தில்
லலித் திஸாநாயக்க
வை.ஜி. பத்மசிறி

கண்டியில்
ஏ.ஆர்.எம். அப்துல் காதர்
எரிக் வீரவர்தன
எஸ். பி.திஸாநாயகக்க

அம்பாந்தோட்டையில்
நிருபமா ராஜபக்ஷ
வி.கே. இந்திக

மாத்தறையில்
சுனில் ஹந்துன்னெத்தி
விஜய தஹநாயக்க
ஹேமால் குணசேகர

மாத்தளையில்
நந்தமித்ர ஏகநாயக
ரோஹண திஸாநாயக்க

மொனராகலையில்
விஜித் விஜயமுனி சொய்சா
ஜகத் புஸ்பகுமார

பதுளையில்
ரோஹண புஸ்பகுமார
உதித லொகுபண்டார


காலி மாவட்டத்தில்
(முன்னாள் அமைச்சர்களான)
பியசேன கமகே
குணரத்ன வீரகோன்
முற்போக்குக் கட்சியின்
அஜித் குமார

உள்ளிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பிரபலங்கள் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி ? 20.08.15 முதல் 26.08.15 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | புகழ் | பக்தி | பாராட்டு | பொறுமை | சிந்தனை | செலவு | புகழ் |
| ரிஷபம் | இன்பம் | நற்சொல் | கவலை | நற்செயல் | உதவி | ஆர்வம் | தெளிவு |
| மிதுனம் | கவலை | சுகம் | செலவு | இலாபம் | பக்தி | பயம் | ஆக்கம் |
| கடகம் | பரிவு | ஆதரவு | கவனம் | ஆதரவு | கவலை | முயற்சி | விவேகம் |
| சிம்மம் | நிம்மதி | பக்தி | நன்மை | வரவு | நிறைவு | கவலை | உயர்வு |
| கன்னி | தனம் | சினம் | பெருமை | கவனம் | வரவு | யோகம் | போட்டி |
| துலாம் | வெற்றி | வரவு | பக்தி | செலவு | பாராட்டு | ஏமாற்றம் | தனம் |
| விருச்சிகம் | ஏமாற்றம் | ஊக்கம் | தெளிவு | புகழ் | பரிசு | மேன்மை | பயம் |
| தனுசு | கவலை | இலாபம் | வெற்றி | பாராட்டு | சுகம் | அன்பு | எதிர்ப்பு |
| மகரம் | சுகம் | பேராசை | வரவு | உற்சாகம் | நன்மை | மகிழ்ச்சி | ஓய்வு |
| கும்பம் | நலம் | போட்டி | பொறுமை | அன்பு | அனுகூலம் | அமைதி | வரவு |
| மீனம் | பிரீதி | அமைதி | நிம்மதி | பக்தி | வெற்றி | போட்டி | நன்மை |

# சும்மா தத்துவம்

காதல் One Side
பண்ணினாலும்
Two side பண்ணினாலும்
கடைசியா Suicide தான்
பண்ணக்கூடாது

இப்படிக்கு
காதல் பற்றி Four Side-ம் யோசிப்போர் சங்கம்

பஸ் ஸ்டாண்ட்ல
பஸ் நிக்கும்...
ஆட்டோ ஸ்டாண்ட்ல
ஆட்டோ நிக்கும்...
சைக்கிள் ஸ்டாண்ட்ல
சைக்கிள் நிக்கும்...
ஆனா...
கொசுவத்தி ஸ்டாண்ட்ல
கொசு நிக்குமா ??



செருப்பு இல்லாம
நாம நடக்கலாம்...
ஆனா,
நாம இல்லாம
செருப்பு நடக்க முடியாது .
தீவிரமாக யோசிப்போர்
சங்கம்



என்னதான்
பொண்ணுங்க பைக் ஓட்டினாலும்,
ஹீரோ ஹோண்டா,
ஹீரோயின் ஹோண்டா ஆகிடாது !!
அதேமாதிரி,
என்னதான் பசங்க
வெண்டைக்காய் சாப்பிட்டாலும்,
லேடீஸ் ஃபிங்கர்,
ஜென்ட்ஸ் ஃபிங்கர் ஆகிடாது !!!

என்னதான் மனுசனுக்கு
வீடு, வாசல், காடு,
கரைன்னு எல்லாம்
இருந்தாலும்...
ரயில் ஏறனும்னா,
ஃப்ளாட்போமுக்கு
வந்துதான் ஆகனும்...
இதுதான் வாழ்க்கை



பில் கேட்ஸோட
மகனா இருந்தாலும்...
கழித்தல் கணக்கு
போடும்போது, கடன்
வாங்கித்தான் ஆகனும்.

நிக்கிற பஸ்ஸுக்கு
முன்னாடி ஓடலாம்
ஆனா......
ஓடுற பஸ்ஸுக்கு
முன்னாடி நிக்க முடியாது...






அவள் என்னைத் திரும்பி பார்த்தாள்..
நானும் அவளைப் பார்த்தேன்..
அவள்..மறுபடியும் என்னைப் பார்த்தாள்
நானும் அவளை மறுபடியும் பார்த்தேன்..
இப்படிக்கு
பரீட்சையில் ஒன்னுமே தெரியாமல்
திருதிரு வென விழிப்போர் சங்கம்



உருவி
லோ பேச்சிலோ
ஒப்ப
னைகளற்ற
பெண் ஆணை
திருக்கிடவைக்
கிறாள்.



உறவு என்பது ஒரு
கோவில்...
அதற்குள் செல்லும்
முன் ஈகோ எனும்
செருப்பை
கழட்டி வைத்
தல் நலம்



மகிழ்ச்சிக்கான
ரகசியம் ஒன்றே ஒன்
றுதான்,
மனதிற்கு நெருக்
கமானவர்
என்ற இடத்தை
யாருக்கும்
கொடுக்காமல்
இருப்பதே அது.






ஒரு நாள் ஒரு சின்ன பையன் தன் அம்மாவுடன் கடைக்குப் போனான். அந்த கடைக்காரர் பையன் அழகா இருக்கானே என்று பாராட்டிவிட்டு போத்தலில் இருந்த சொக்லேட்டை காட்டி எவ்வளவு வேணுமோ எடுத்துக்கோப்பா என்றார்.

ஆனால், அந்த பையன் சொக்லேட்டை எடுக்கவே இல்லை.கடைக்காரர் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் எடுக்கவில்லை.அதை பார்த்த அவன் அம்மா சொக்லேட் போத்தலில் இருந்து எடுத்துக்கோ என்றார்.

அப்பவும் அவன் சொக்லேட்டை எடுக்கவே இல்லை.


பிறகு அந்தக் கடைக்காரரே சொக்லேட்டை அள்ளி அவன் கைகளில் வைத்தார்.அவன் ஆசையுடன் இரண்டு கைகளாலும் வாங்கிகொண்டான்.


வீட்டிற்கு போனவுடன் அவன் அம்மா ஏன் சொக்லேட்டை போத்தலில் இருந்து நீயே எடுத்து கொள்ளவில்லை என்று கேட்டார்.

அம்மா என் கையை பாருங்கள் எவ்வளவு சின்னதா இருக்குது. நானே போத்தலில் இருந்து எடுத்து இருந்தால் எனக்கு கொஞ்சமாக தான் கிடைத்திருக்கும் இப்ப பாருங்க அவர் எடுத்து கொடுத்ததால் எவ்வளவு அதிகமா சொக்லேட் கிடைச்சிருக்கு பாருங்கள் என்றான்.

நீதி: எதையுமே நாமாகவே நாடிப்போனால் குறைவா தான் கிடைக்கும் அதுவா தேடி வந்தா அதிகமா கிடைக்கும்...

## என்ன ஒரு புத்திசாலித்தனம்






முடியாதென முயற்சிக்காமல் இருந்தால்
எதுவும் முடியாது!
முடியும் என நினைத்து அதற்காக முயற்சி
செய்தால் எதுவும் முடியும்!

உயிரைக் கொடுத்தாலும் திரும்பிக்
கிடைக்காதது நேரம். அந்த நேரத்தை
ஒருவருக்காக செலவழிக்கும் முன்
அவர் அதற்கு தகுதியானவரா
என ஆராய்வது நல்லது.



செய்யும் வேலையை
உரக்கச் சொல்லிக்
கொண்டே இருங்கள்
இல்லாவிட்டால்
அதற்கான பலனை
வேறு எவரோ தட்டி
போகக்கூடும்.

## அப்துல்கலாம் விட்டுச்சென்ற
### உடைமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.



புத்தகங்கள் -2500
கைக் கடிகாரம் -1
முழுக்கைச் சட்டை -6
காற் சட்டை -4
சூட் - 3
ஷூ - 1 ஜோடி

சொந்தமாக டிவி, பிரிட்ஜ், ஏசி, கார் எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. வானொலி கேட்பார் மற்றும் செய்தித் தாள் படிப்பார்.

50 ஆண்டுகள் பொதுவாழ்வில் வாழ்ந்த ஒரு மனிதரின் மறுபக்கம்தான் இவை. அவர் ஏழ்மையில் வாழவில்லை, ஆடம்பரத்திலும் திளைக்கவில்லை, குறைந்தபட்சம் என்ன இருந்தால் போதுமோ அப்படி வாழ்ந்தார்.

தன் ஒய்வூதியம் மற்றும் தான் எழுதிய நூல்களுக்கு கிடைத்த உரிம பணம் என்பவற்றிலும் ஜீவனம் நடத்தினார். புத்தகம் என்ற பெயரில் வேறு எதாவது பொருட்கள் பரிசாக வரும் பட்சத்தில் அதை பதிவு செய்து அரசாங்க கருவூலத்திற்கு அனுப்பிவிடுவார். தன்னுடைய சேமிப்பிலிருந்து நிறைய தான தர்மங்களும், தேர்ந்தெடுத்த அறக்கட்டளைகளுக்கும் கொடையளித்தார்.

பதவியில் இருந்தபோது பெற்ற வருமானத்தில் பாதியும், பிறகு ஒய்வூதியத்திலும் ஒரு பாதி, தன் அண்ணன் குடும்பத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார். அடுத்த ஆண்டு தன் மூத்[illegible]ண்ணனின் 100ஆவது பிறந்தநாளை விமரிசையாக கொண்டாட வேண்டும் என்று விரும்பியவர்.

கர்மவீரரை மிஞ்சும் ஒருவரை நாம் கண்டுள்ளோம். அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்று பெருமை கொள்ளலாம்.













ருவான் விஜேவர்தன 157932
சதுர சேனாரட்ன (ராஜிதவின் மகன்) 71243

ஐ.ம.சு.கூ.
பிரசன்ன ரணதுங்க 384448
பிரசன்ன ரணவீர 112395
நிமல் லன்சா 94375

**பதுளை மாவட்டம்**
ஐ.தே.க.
ஹரின் பெர்னாண்டோ 200806
அரவிந்தகுமார் 53741
வடிவேல் சுரேஷ் 52378

ஐ.ம.சு.கூ.
நிமல் சிறிபால டி. சில்வா 134406
தேனுகவிதான கமகே 43517

**கண்டி**
ஐ.தே.க.
லக்ஷ்மன் கிரியெல்ல 199046
மயந்த திஸாநாயக்க 111190
றவுப் ஹக்கீம் 102186
எம்.வேலுகுமார் 62556

ஐ.ம.சு.கூ
லொஹான் ரத்வத்த 129750
மகிந்தானந்த அலுத்கமகே 123393
திலும் அமுனுகம 104469
அனுராத ஜெயரத்ன
(தி.மு.ஜயரட்ன மகன் 93567

**மாத்தளை மாவட்டம்**
ஐ.தே.க.
வசந்த அலுவிகார 75926
ரஞ்சத் அலுவிகார 74785
ரோகினி குமாரி கவிரத்ன 41766

ஐ.ம.சு.கூ.
லக்ஷ்மன் வசந்த பெரேரா 79309
ஜனக்க பண்டார தென்னகோன் 61920

**யாழ்ப்பாணம்**
த.தே.கூ.
ஸ்ரீதரன் 720558

ஈ.பி.டி.பி
டக்ளஸ் தேவானந்தா 16399

ஐ.தே.க.
விஜயகலா மகேஸ்வரன் 13071

**அம்பாந்தோட்டை**
ஐ.தே.க.
சஜித் பிரேமதாஸ 112645
திலிப் வெத்த ஆராச்சி 65391

ஐ.ம.சு.கூ.
நாமல் ராஜபக்ஷ 127201
மகிந்த அமரவீர 84516
சமல் ராஜபக்ஷ 80621

**திருகோணமலை**
த.தே.கூ.
சம்பந்தன் 33 834

ஐ.தே.க.
இம்ரான் மஹ்ரூப் 32582
ஐ.ம.சு.கூ.

சுசந்த புஞ்சி நிலமே 19953

**மாத்தறை மாவட்டம்**
ஐ.தே.க.
புத்திக பத்திரன 98815
மங்கள சமரவீர 96092
சாகல ரத்னாயக 85771

ஐ.ம.சு.கூ.
டலஸ் அலகப்பெரும 105408

**பொலன்னறுவை**
ஐ.தே.க.
வசந்த சேனாநாயக்க 75651

ஐ.ம.சு.கூ.
ரொசான் ரணசிங்க 76825

**புத்தளம்**
ஐ.தே.க.
பாலித ரங்கே பண்டார 66960

ஐ.ம.சு.கூ.
நிசாந்த பெரேரா 68240

**கேகாலை**
ஐ.தே.க.
கபீர் ஹாசிம் 109030

ஐ.ம.சு.கூ.
கனக ஹேரத் 95897

**அனுராதபுரம்**
ஐ.தே.க.
பி.ஹரிசன் 113346
சந்திரானி பண்டார 83666

ஐ.ம.சு.கூ
எச்.எம்.சந்திரசேன 118234
துமிந்த திசாநாயக்க 60071

**களுத்துறை**
ஐ.தே.க.
ராஜித சேனாரத்ன 142186
அஜித் ஜி பெரேரா 131833

ஐ.ம.சு.கூ.
குமார் வெல்கம 218614
ரோகித அபேகுணவர்தன 127090

**காலி**
ஐ.தே.க.
கயந்த கருணாதிலக 149573

ஐ.ம.சு.கூ
சந்திம வீரகொடி 114851

**இரத்தினபுரி**
ஐ.தே.க.
தலதா அத்துகோரல 145828

ஐ.ம.சு.கூ.
பிரேமலால் ஜயசேகர 154988
பவித்ராதேவி வன்னியாராச்சி 87660
வாசுதேவ நாணயக்கார 81068

**மொனராகலை**
ஐ.தே.க.
ரஞ்சித் மத்தும பண்டார 82316

ஐ.ம.சு.கூ.

விஜித பேருகொட 74313

**திகாமடுல்ல**
ஐ.தே.க.
தயாகமகே 70201

ஐ.ம.சு.கூ
விமல வீரதிஸ்ஸ 53537

**வன்னி**
தமிழரசுக் கட்சி
சால்ஸ் நிர்மலநாதன் 34620
சிவசக்தி ஆனந்தன் 25027

ஐ.தே.க.
ரிசாத் பதியுதீன் 26291

**மட்டக்களப்பு**
தமிழரசுக் கட்சி
ஸ்ரீநேசன் 46421

முஸ்லிம் காங்கிரஸ்
அலிசாகிர் மௌலானா 16111

ஐ.தே.க.
அமிர் அலி 16386


**தாசன்**








# தேர்தல் ரியாக்ஷன்



































இல. 117A, பிரதான வீதி, ஹட்டன். தொ.பே: 051-2225515, கை.தொ.பே: 077-3650665